1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

77-ம் புத்தகம் 49-ம் இல. யாழ்ப்பாணம் 1952-ம் ஆண்டு மார்கழிமாதம் 18-ந்திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10

## வானொலியில் வானொளி

சுவிசேஷத்திலே புறசமயத்தவர்களின் உள்ளங்களை விசேஷவிதமாகக் கவர்வது நமதுஆண்டவர் மலைமேல்செய்த பிரசங்கம். சிலகாலத்திற்குமுன் வத்திக்கானில் இந்தியஸ்தானிகராக விருந்த ஸ்ரீ திரிஜாலால் தேசாய்அவர்கள் பரிசுத்த பாப்பரசருடன் சம்பாஷித்துக்கொண் டிருக்கையில், "யேசுக்கிறீஸ்துநாதரின் உன்னதபோதனைகளைத் தாம் கண்டுபிடித்த அளவிற்குத் தமது வாழ்க்கையிலே அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரமுயன்ற மகாத்மாகாந்தியை வழிகாட்டியாகவும், தலைவராகவுங்கொண்டு நாங்கள்புரிந்த தியாகங்களின்பயனாக இந்தியா சுதந்தரம்அடைந்தது. எங்கள்பலமெல்லாம் அவரிடமிருந்தே பெற்றுக்கொண்டோம். உலகிலுள்ள பகவத்கீதைப் புத்தகங்களெல்லாம் மறைந்துபோய்விட்டாலும் கவலையில்லை. யேசுக்கிறீஸ்துநாதர் மலைமேல்செய்த பிரசங்கம் ஒன்றிருந்தால் நமக்குப் போதும்என்று அவர் நம்பியிருந்தது போலவே நாங்களும் நம்பியிருக்கிறோம்" என்று கூறுவாராயினர். இந்த மலைப்பிரசங்கத்தின் முன்னுரையாகவும், மிகஆழ்ந்த கருத்துகளை யுடையதாகவுமுள்ள பகுதியைப்பற்றிப் பிரபலசிந்தனையாளரும், பிரசங்கியாருமாகிய மிகவண. ஷெவ்ரோசுவாமிகள் (Mgr. Chevrot) றேடியோ-லுக்ஸெம்பூர்குஎன்ற ஒலிபரப்பு நிலையத்திற் செய்த பிரசங்கங்களின்சாரமே பின்வருவது.

மீளவும் கலிலேயாநாட்டிலும், தெக்கப்பொலி என்னும நாட்டிலும், ஜெருசலேம்நகரத்திலும், யூதேயா தேசத்திலும், யோர்தான்நதிக் கப்புறத்திலுமிருந்து திரளானசனங்கள் அவரைப் பின்தொடர்ந்தார்கள். யேசுநாதரோ சனக் கூட்டங்களைக் கண்டு பருவதத்தின் மேலேறி உட்கார்ந்தபின்பு அவருடைய சீஷர்கள் அவரண்டையில் வந்தார்கள். அப்போது அவர் தமது திருவாய்மலர்ந்து அவர்களுக்கு உபதேசித்துத் திருவுளம்பற்றினதாவது:

"மனதரித்திரர்பாக்கியவான்கள், ஏனெனில், மோட்சஇராச்சியம் அவர்களுடையது. சாந்தகுணத்தோர் பாக்கியவான்கள், ஏனெனில், அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள். அழுவோர் பாக்கியவான்கள், ஏனெனில், அவர்கள் ஆறுதலடைவார்கள். நீதியின் மேற் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில், அவர்கள் திருப்தியடைவார்கள். இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில், அவர்கள் இரக்கமடைவார்கள். தூய இருதயமுள்ளவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில், அவர்கள் சர்வேசுரனைத் தரிசிப்பார்கள். சமாதானகுணத்தோர் பாக்கியவான்கள், ஏனெனில், அவர்கள் சர்வேசுரனுடையபிள்ளைகள் என்னப்படுவார்கள். நீதியினிமித்தம் உபத்திரியப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில், மோட்சஇராச்சியம் அவர்களுடையது. என்னைப்பற்றி மனிதர் உங்களைச் சபித்துத்துன்புறுத்தி உங்கள் பேரில் சகலதின்மையும் அபாண்டமாய்ச் சொல்லும் போது நீங்கள்பாக்கியவான்கள். அதினாலே பரலோகத்தில் உங்கள்சம்பாவனை ஏராளமாயிருக்கின்றமையால் சந்தோஷித்து அக்களியுங்கள். உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகள் அப்படியே உபத்திரியப்பட்டார்கள்." (அர்ச். மத். 4: 25; 5: 1-12.)

யேசுநாதர் பன்னிருவர்களோடுஇறங்கி மைதானமான ஓர்ஸ்தலத்தில் நின்றார். அங்கே அவருடையசீஷர்களின் கூட்டமும், யூதேயாதேச மெல்லாத்திலும், எருசலேமிலும், தீர் சீதோன் பட்டணங்களின் கடலுக்கடுத்த நாட்டிலும் இருந்து வந்த திரளான சனக்கும்பலும் இருந்தன. அவருக்குச் செவி கொடுக்கவும் தங்கள் நோய்நீங்கிச் சௌக்கியப்படவும் அவர்கள் வந்திருந்தார்கள். அசுத்த அரூபிகளால் உபாதிக்கப்பட்டவர்களும் சொஸ்தப்படுவார்கள். சனங்கள்எல்லாம் அவரைத் தொடத்தேடுவார்கள். ஏனென்றால், சக்தி அவரிடத்தினின்றும புறப்பட்டு எல்லோரையுஞ் சொஸ்தப்படுத்திக் கொண்டிருந்தது.

## கோவைநகர திருக்காட்சி

தூரகிழ்தேசங்களுக்குக் கிறீஸ்துபெருமானின் திருவேதத்தைக் கொண்டுவந்த அர்ச். பிரான்சீஸ் சவேரியார் பரலோகபிராப்தியான நான்காம் நூற்றூண்டு விழாவின் ஞாபகார்த்த விசேஷ மகோற்சவங்களையிட்டு உலகின்ஒவ்வோர் பகுதியிலுமிருந்தே பெருந்திரளான யாத்திரிகர்கள் போர்த்துக்கேய இந்தியாவைச்சேர்ந்த கோவைநகர்வந்து சேரலானார்கள். திருவைபவங்களுக்குப் பாப்பரசரின் பிரதிநிதியாக நியமனம்செய்யப்பெற்ற லிஸ்பன்நகர பத்திரியாக்குவான கருதினல் கொன்சால்வெஸ் செறெஜேய்றோ ஆண்டவர் இம்மாதம் 1-ந்திகதி திங்கட்கிழமை கோவைநகர்வந்து சேரலாயினர். அவருடன் போர்த்துக்கேய, ஸ்பானிய அரசாங்கங்களின் பிரதிநிதிகளும் வந்திருந்தார்கள். நகரில்வந்திருந்த அநேகாயிரக்கணக்கான யாத்திரிகர்கள் மத்தியிலே மூன்று அதிமேற்றிராணிமாரும், பதினேழு மேற்றிராணிமாரும், நூற்றுக்கணக்கான குருமாரும் இருந்தார்கள்.

கோவைநகர் வந்துசேர்ந்து கொண்டிருந்த ஒவ்வொருகப்பலும் பிரித்தானிய கிழக்கு ஆபிரிக்காவையும், மொசம்பிக்நாட்டையும்சேர்ந்த ஆயிரக்கணக்கானோர்உட்பட அதிகமானயாத்திரிகர்களை நகரில் கொண்டுவந்து இறக்கியவண்ணமிருந்தது. கராச்சியிலிருந்து வந்த மூன்றுவிசேஷ யாத்திரைக்கப்பல்களும், பம்பாயிலிருந்துபோன கரைப்பிரயாணக் கப்பல்களும் யாத்திரிகர்களால் தேங்கியிருந்தன. அர்ச். சவேரியார் மரணமடைந்த வருடாந்த ஞாபகதினமாகிய 3-ந்திகதி புதன்கிழமையன்று கோவைநகர் வீதிகளினூடாகச் சுற்றுப்பிரகாரமாய்க் கொண்டுசெல்லப்பட்ட அவர் திருமேனியைச் சுமார் ஒரு லட்சம் மக்கள் பார்த்துநின்றார்கள். "கிறீஸ்துநாதரது திருச்சிலுவையின்கீழ் கீழ்திசை நாடுகளை வைப்பதற்கு அர்ச். பிரான்சீஸ் சவேரியார் கொண்டிருந்த பரமார்த்தம் இற்றைக்கு 400 வருடங்களின் முன் அவரோடு இறந்துபடவில்லை; ஆனல், அவரது பதிலாளிகளின் உற்சாகபோக்கிலே உயிர்வாழ்ந்திருக்கிறது" என்று பரிசுத்தபாப்பரசர் கோவைக்கு அனுப்பிய வானொலிச்செய்தியில் கூறிநின்றார். கோவைநகர மகோற்சவங்கள் ஓர் முழுமாதகாலம் நீடித்திருக்கும். அந்த ஒரு மாதகாலமும் அவர் திருமேனி பக்தர்களின் வணக்கத்துக்காகக் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும்.

கோவைநகர் ஆசனக்கோவிலிலே வருகிற தைமாதம் 3-ந்திகதிக்குமுன் உலகமுழுவதிலுமிருந்து பத்துலட்சம் யாத்திரிகர்கள்வரையில் காட்சிபார்க்க வந்து கூடுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. அதன்மேல் திருமேனியானது விசேஷவிதமாக அமைக்கப்படும் பேழை ஒன்றில் நிரந்தரமாகப் பூட்டிவைக்கப்படும். திருமேனியைக் கிறீஸ்தவர்களைப்போலவே முஸ்லீம்களும், இந்துக்களும் தரிசித்துச் செல்லுகின்றார்கள். ஆயிரக்கணக்கானோர் பார்த்துநிற்க நடைபெற்ற திருவைபவம் ஒன்றிலே முத்திரவு கோல்கள் கொண்டு திருமேனிப் பேழை திறக்கப்பட்டதன் மேல் சமீபமான பொம்யேசு மகாலயத்திலிருந்து அதிமேற்றிராணிமார் ஆசனக்கோவிலுக்கு அதனைச் சுமந்துசென்றார்கள்.

றோமாபுரியிலே யேசு.வின் யேசுசபை ஆலயத்திலே ஓர் திரிதினஉற்சவம் நடைபெறலாயிற்று. அங்குள்ள அர்ச். பிரான்சீஸ் சவேரியாரின் பீடத்தில் திவ்வியபூசை நிறைவேறியது. இந்தப்பீடத்தின் கீழ்தான் அர்ச். பிரான்சீஸ் சவேரியாரின் வலதுபுயமாகிய திருப்பண்டம் இருந்துவருகிறது. பரீஸ்நகரிலே அர்ச். பிரான்சீஸ் சவேரியார் ஆலயத்திலும், மொண்மாத்தர் மகாலயத்திலும் விசேஷஆராதனைகள் நடைபெறலாயின. அவற்றிலே கருதினல்மாரா கத் தெரியப்பெற்றிருக்கும் பெல்ரின் ஆண்டவரும், றொங்கலி ஆண்டவரும் ஆராதனைகள் நடத்தினர்கள்.

அவர் தம்முடைய சீஷர்களுக்கு நேராய்த் தமதுகண்களை ஏறெடுத்துத் திருவுளம்பற்றினதாவது:

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ச். பிரான்சீஸ் சவேரியாரின் திருச் சரீரம்

[சலாப மேற்றிராணியாராகிய மகாவந். எட்மன் பீரிஸ் ஆண்டவரவர்கள் ஆங்கிலத்தில் எழுதியது.]

கோவை மாநகரில் பூச்சியமாகப் பேணிக் காப்பாற்றப்படும் அர்ச். பிரான்சீஸ் சவேரியாரின் திருச்சரீரம் இம்மதி 3-ந்திகதி தொடக்கம் ஒரு மாச காலத்திற்குப் பக்தர்களால் வந்திக்கப் படுவதற்காகப் பிரசித்தமாய் வைக்கப் பட்டிருக்கிறது. இலங்கைக் கத்தோலிக்க சரித்திரத்தில் முதல்முறையாக ரோமான் கத்தோலிக்க மேற்றிராணிமார், குருமார் முன்னோடிகளாகச் செல்ல, சுமார்ஆயிரம் கிறீஸ்தவர்கள் சேர்ந்து தேசியதிருயாத்திரையாக இம்மதி 1-ந்திகதி அங்குசெல்லலாயினர். இவர்கள் இலங்கைமண்ணில் காலூன்றியவராய்த் திருப்பட்டந்தரிக்கப்பெற்ற ஒரேயொரு அர்ச்சியசிஷ்டருக்குச் சங்கைசெய்யும்முகமாகவே செல்லலாயினர்.

ஓர்மரித்தசடலம் நானூறு (400) வருடங்களாக ஒருவகையான பரிகரிப்பும், மருந்துகள்மூலமாய்ப் பக்குவமுஞ் செய்யப்படாமல் அழியாதிருப்பதென்றால் இச்செய்தி வேறுநல்லுணர்ச்சிகளை உண்டாக்காதபோதிலும் பெரும் பிரமிப்பையும், விநோதப்பிரியத்தையும் உண்டாக்குவதாகும். இது சமய சம்பந்தமான உணர்ச்சியை மாத்திரமல்ல, மனிதகவர்ச்சியையும் தூண்டிவிடுவதாகும். இத்திருச்சடலம்பற்றிய உண்மை வரலாற்றின் விபரங்களை அணுவளவேனும் கூட்டாது ஈண்டுதருகிறோம்.

பிரான்சீஸ் சவேரியார் ஓர் ஸ்பானிய துரைமகன். எம். ஏ. பட்டதாரி. பரீஸ் நகர சர்வகலாசாலையிலே அரிஸ்ரோட்டலின் தத்துவசாஸ்திர போசிரியர். யேசுசபைக்குரவர். ஓர் அர்ச்சியசிஷ்டர். இவர் பிறெனீஸ் மலைச்சாரலிலே அலங்காரமாய்த் துலங்கிநிற்கும் "சவேரி" என்னும் மாளிகையில் பிறந்தார். யேசுசபையை அடியிட்டவராகிய அர்ச். லொயோலா இஞ்ஞாசியாரின் ஞானக்கொள்கைகளைப் பின்பற்றிப் போசிரியர்பதவியையும், உலகப்புகழையும்துறந்து இந்தியாவில் கத்தோலிக்க சமயத்தைப் போதிப்பதற்காகத் தமது சீவியத்தை அர்ப்பணஞ் செய்தார். கோவைப்பட்டணத்தில் அவர் வந்திறங்கியது 1542-ம் வருடம் வைகாசிமாதம் 6-ந்திகதி. (6-5-1542) கோவை, தூத்துக்குடி, கொச்சி, திருவிதாங்கூர்க் கரையோரநீளம் கால்நடையாகப் பன்முறைநடந்து திருத்தொண்டாற்றினார். இலங்கை, நாகபட்டணம், மைலாப்பூர், மலாக்கா, மொலுக்காஸ், சிங்கப்பூர், யப்பான் ஆதியாம்இடங்களைத் தரிசித்து வேதம் போதித்தார்.

1551-ம்வருடம் திரும்பவும் கோவைக்குவந்து, யப்பானுக்குச்சென்று அங்கிருந்தபொழுது சீனாவைப்பற்றி அறிந்துகொண்டமையால் அங்கு செல்ல முஸ்திப்புச்செய்தார். 1552-ம் வருடம் சித்திரைமாசம் 17-ந்திகதி (17-4-1552) சீனாவுக்குப் பயணமாகிப் பெரும்புயலின்நடுவே அகப்பட்டகாரணமாகச் சீனாவுக்கெதிரேயுள்ள சான்சியன் என்னும்தீவில் இறங்கவேண்டி நேர்ந்தது. அங்கு ஒரு குடிசையில் தங்கியிருந்தபொழுது கடுஞ்சுரம்உண்டாய் மாணுபத்துக்குள்ளாகி மார்கழி மாசம் 2-ந்திகதி பி. ப. சுமார் 2 மணியளவில் படைத்தவர்கரத்தில் தமது ஆன்மாவை ஒப்படைத்தார். மரித்த பொழுது அவருக்குவயது 46. கீழைத் தேசங்களில் சுமார் 10 வருடம் 7 மாதம் செலவிட்டார்.

## பிரேதக்குழி திறக்கப்பட்டது

மரித்தசவேரியாரின் திருச்சரீரம் குருத்துவஆடைகள் அணியப்பெற்று மூடான ஓர்பெட்டியில்வைத்து நிரம்பச்சுண்ணும்புபோட்டு மூடப்பட்டது. இப்படிச்செய்யப்பட்ட காரணம்யாதெனில், விரைவிலே அவர் மாமிசம்உக்கி அழிந்துவிட, எலும்புக்கோர்வையைக் கோவைநகர்கொண்டு போய்ச் சேர்க்கலாமெனும் எண்ணத்தினுலேயாம். அதன்மேல் அந்தோனியோ என்னும்பிரமாணிக்கமுள்ள சீன ஊழியனுடன் "சாந்தாக் குரூச்சே" என்னும் போர்த்துக்கேய கப்பல் மாலுமிகளும் ஒன்றுசேர்ந்து அத்தீவிலுள்ள ஓர் சிறுகுன்றின்மேல் திருச்சரீரத்தைப் பூமதானம்செய்து அடையாளமாக ஒரு திருச்சிலுவையை ஏற்றிவைத்தார்கள்.

1553-ம்வருடம் மாசிமாதம் 17-ம் திகதி "சாந்தாக் குரூச்சே"என்னும் அதேகப்பல் திரும்பவும் சான்சியன் என்னும் தீவுக்குவந்து சிலுவையடையாளம் காணப்பட்ட முனைக்கெதிரே நங்கூரமிட்டது. அதில் இருந்தவர்கள் கரையில்இறங்கிப் பிரேதக்குழியைத்திறந்து பெட்டியின்மூடியைக் கழற்றி மூந்தமூந்தச் சுண்ணும்பை ஓர் பக்கமாக ஒதுக்கிப்பார்த்தபொழுதுசடலம்அணுவளவும் பழுதடையாமலிருப்பதையும், புதியதாய்ச் சொல்லொணு நறுமணம்வீசிக்கொண்டிருப்பதையும்கண்டு அனைவரும் பிரமிப்படைந்தனர். அதற்கு அணிந்திருந்த திருவஸ்திரங்களும் அழியாதிருந்தன. கப்பற்காரரில் ஒருவன் சரீரத்தின் தன்மையை அறியும் விநோதப்பிரியத்தால் இடதுதொடையில் முழங்காலுக்கணித்தாயுள்ள தசையில் ஒருசிறுதுண்டை

தமிழாக்கம்:
வண. S. A. ஞானப்பிரகாசம் சுவாமியவர்கள்

வெட்டினன். உடனே இரத்தம் தாரையாய் ஓடத்தொடங்கியது. இக்காட்சி அவர்கள்மத்தியில் ஞானவேகாத்தை உண்டுபண்ணவே, தாங்கள் அவரைப் பாரகண்டிதமாய் விட்டுப்போனதை நினைந்து துக்கித்து, அனைவோரும் பெருங்குரலெடுத்து அழுது அவரிடம் மன்னிப்புக்கேட்டு நின்றார்கள். இக்குரலொலியைக் கப்பலில் எஞ்சியிருந்தவர்கள் கேட்டு அங்கு ஓடிச் சென்று தாங்களும் காட்சியைக்கண்டதன்மேல் எல்லோரும் ஒன்றுசேர்ந்து பெட்டியைக் குழியைவிட்டு மேலேயெடுத்துச் சுண்ணும்பைத் திரும்பவும் சீர்ப்படுத்திப் பெட்டியை அடைத்துத் திருச்சடலத்தை வெகு ஆசாரத்துடன் கப்பலுக்குச் சுமந்து சென்றார்கள்.

## இரத்தம் சொரிந்தது

"சாந்தாக் குரூச்சே" என்னும்கப்பல் பங்குனிமாசம் 22-ந்திகதி (1553) மலாக்காவந்து சேர்ந்தது. அக்கப்பல் கொண்டுவந்துசேர்த்த விலையேறப்பெற்ற திரவியத்தைப்பற்றிக் கேள்வியுற்றசனங்கள் பெருந்திரள்திரளாய்க் கரைக்குஓடிவந்து அதனை வரவேற்று மகிமைப்படுத்தினார்கள். மலாக்கா மேற்றிராணியாரின் அனுமதியுடன் இரண்டு குருப்பிரசாதிகள் திருமேனிப் பெட்டியை அவர்சமூகத்தில் திறந்தபொழுது சடலம்அழியாது சுமுத்திரையாய் இருப்பதையும், உயிருள்ளசரீரத்தின் தோற்றங்களெல்லாம் அதில் காணப்பட்டதையும், திருவஸ்திரங்கள் தாமும் அழியாதிருப்பதையும் கண்டார்கள். மறுநாள் திருச்சரீரம் பெரும்பவனியாகப் பட்டணத்தின் பெருவீதிகளி[illegible]

பட்டதன்மேல் அடக்கத்திருச்சடங்குகள் நிறைவேறின. ஈற்றில் அணிந்திருந்த குருத்துவஅங்கிகளுடன் திருமேனிமட்டும் பெட்டியைவிட்டு வெளியேஎடுக்கப்பட்டு, துகிலொன்றால்மாத்திரம் சுற்றிக்கட்டப்பட்டு, தலையின்கீழ் ஓர்தலையணை வைக்கப்பட்டு, முகம் ஓர்குட்டையால் மூடப்பட்டுப் பூமியில் அடக்கஞ்செய்யப்பட்டது. மேலும் அடக்கஞ்செய்தகுழி சரீரத்தின்நீளத்துக்குக் குறைவாக வெட்டப்பட்டதினுலும், குழியை மூடியபொழுது மேற்பூமியைஅமத்தியதினுலும்சரீரம்சற்று அவலப்படுத்தப்பட்டுக் காயங்கள்உள்ளதாகப் பின்பு ஒருமுறை திறந்தபோது காணக்கூடியதாகவிருந்தது. அத்துடன் பிடரிப்பக்கத்தில் கழுத்துமுரிந்து கனதியான இரத்தம்சொரிந்திருந்ததையும் அவதானித்தார்கள். சிலமாதங்களுக்குப்பின் யோண்டா பேய்ரூஎன்னும் குருவானவர் இன்னுமோர் குருவானவருடனும், சந்நியாசியுடனும் மலாக்காவுக்கு வந்திருந்தார். இவர்மொலுக்காஸ்பகுதிக்கு நியமிக்கப்பட்டவரானதாலும், நமது அர்ச்சியசிஷ்டரில் அதிக அன்புடையவராய் இருந்ததினுலும் தாம்போகுமுன் அவருடைய திருமுகத்தைக் கண்ணாரக்கண்டுபோக வேண்டுமெனவிரும்பி இராவிராவாய்ச் சிறுசுழுவினரின் உதவியோடு மூவரும் இரகசியமாகத் திருமேனியை அடக்கஞ்செய்திருந்த குழியைத் திறந்துபார்த்தார்கள்.

(தொடரும்)

# சுதேச வர்த்தமானம்

## சயரோக முத்திரைகள்

இலங்கைத் தேசியசயரோக தடைச் சங்கம் ஒழுங்குபண்ணிய வருடாந்த சயரோக முத்திரைவிற்பனவு சென்ற திங்கட்கிழமை ஆரம்பமாயிற்று. முத்திரை ஒன்று பத்துச்சதமாகவும், இருபது முத்திரைகளைக்கொண்ட ஒருதாள் இரண்டு ரூபாவாகவும் விற்கப்படுகிறது. இந்தமுத்திரைவிற்பனவிலிருந்து கிடைக்கும் பணத்தின் ஒரு பகுதியானது பிள்ளைகளின் சயரோக ஆஸ்பத்திரி ஒன்றுகட்ட உபயோகிக்கப்படும். இதில் சுமார் நூறுபிள்ளைகளுக்கு இடவசதியிருக்கும். இதனைக் கட்டச் சுமார் நாலரைலட்சம் ரூபா தேவைப்படுகிறது. இப்பணத்திலே மூன்றுலட்சம் ரூபாவைப் பொதுத் தருமகர்த்தா நன்கொடையளிப்பதாக வாக்குப்பண்ணியிருக்கின்றார்.

## மன்னரும் களைபிடுங்குதலும்

மன்னார்ப்பிரிவிலுள்ள சகலவயல்களிலும் களைபிடுங்கும் இயக்கமொன்றை அரசாங்க உதவிஏசன்றர் திரு சி. ஜே. சேரசிங்கஅவர்களும், மன்னார்ப்பிரதிநிதி திரு. சி சிற்றம்பலம்அவர்களும் சென்ற 12-ந் திகதி ஆரம்பித்துவைத்தனர். முதலில் கொச்சிக்குளத்திலும், நாவற்குளத்திலும் காரியாதிகாரி திரு. ஜே. எம். சபாரத்தினம் அவர்கள் ஒழுங்குசெய்த இந்தஇயக்கத்தில் ஐஞ்ஞூற்றுக்குமேற்பட்ட மாணவர்களும், கிராமாபிவிர்த்திச்சங்க அங்கத்தவர்களும் கலந்துகொண்டார்கள். அரசாங்கத்தின் உணவுஉற்பத்தி இயக்கத்துக்குச் சகலரும் உதவிசெய்யவேண்டுமென்று பேச்சாளர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

## கட்சியிலிருந்து விலகினர்

இலங்கைக் கம்யூனிஸ்தகட்சியின் முன்னாள் பிரதமகாரியதரிசியாயும், முன்னர் பாராளுமன்றத்திலே மாத்தறைப் பிரதிநிதியாயும் இருந்தவரான திரு. ஹரி அபெகுணவர்த்தன என்பவர் அக்கட்சியிலிருந்து விலகியிருக்கின்றார். இருவருடங்களின் முன் இவர் கம்யூனிஸ்தகட்சியின் கொள்கையிலே திருத்தங்கள் செய்யப்படவேண்டுமென்று சாதித்துகின்றார். ஆனால், இவரது அரசியல்வழிமுறையை நிராகரித்துவிட்ட கம்யூனிஸ்தகட்சி மகாநாட்டைத்தொடர்ந்து அக்கட்சியின் மத்தியகுழுவானது "நெறிவழுவு வதர்ண முறை"யிலே வழிநடத்துவதையிட்டு இவரைக் கண்டனஞ்செய்து அதேகுற்றச்சாட்டின்பேரில் இவரது பிரதான ஆதரவாளர்களையெல்லாம் கட்சியிலிருந்து தாத்திவிடலாயிற்று.

## அமெரிக்க சீனஅரிசி

குறுகியகால ஒப்பந்தத்தின்படி சீன அரசாங்கம் கொடுக்கவாக்குப்பண்ணிய 80,000 தொன் அரிசியில் இதுவரையிலே இலங்கை 18,000 தொன் அரிசியைப் பெற்றுவிட்டது. மீதியான அரிசி வருகிற தைமாதமுடிவிற்குள் பாகம்பாகமாகக் கப்பலில்வந்து சேரும். 30,000 தொன் அமெரிக்க அரிசியையும், 12,000 தொன் பர்மா அரிசியையும் இம்மாத இறுதிக்குள் இலங்கை பெறவிருக்கிறது

## அதிகாரம் இருந்தால்

"எனக்கு அதிகாரமிருந்தால் அரிசி உணவு இல்லாமையால் எவராவது பட்டினிகிடந்து சாகிறாரோஎன்பதைக் கண்டுகொள்ளுமாறு ஒருவருடகாலத்துக்கு அரிசியல்லாத வேறுஉணவிலே சனங்களெல்லாம் சீவித்திருக்கப் பண்ணுவேன்" என்று டெறனியகலையில் நடைபெற்றபாடசாலைப்பரிசளிப்பு விழாவொன்றில் போக்குவரத்துமந்திரியார் சேர் ஜோன் கொத்தலாவல அவர்கள்கூறி அரிசிப்பிரச்சினைவிஷயமாகப் பெரிதும்கவலை தெரிவித்துக் கொண்டார். இந்நாட்டின் தேவைக்குப் போதியஅரிசி இந்நாட்டிலேயே உற்பத்திசெய்யப்பட்டால், அல்லது சனங்களின் பிரதான உணவாகிய அரிசியை வேறுவகையிலேமாற்றிக்கொண்டால்அரிசிக்கு உவமான்யமாகத் தற்போது கொடுபட்டுவரும் 16 கோடி ரூபாவையும் ஆஸ்பத்திரிகள்,பாடசாலைகள், மற்றும்பொதுசன தேவைகளுக்கும் அதிகம் பயன்தரக்கூடியவகையிலே பயன்படுத்த முடியுமென்றும்அவர் கூறிநின்றார்.

## நெற்செய்கையும் நெல்விளைவும்

இலங்கையிலே சென்ற 1951-ம் ஆண்டின் பெரும்போககாலத்திலும், சிறுபோககாலத்திலும் 10,56,540 ஏக்கரில் நெற்செய்கை நடைபெற்றதென்றும், அதில் 2,43,00,420 புசல் நெல் விளைவிக்கப் பட்டதென்றும், இந்தக்கணக்கைக்கொண்டு பார்க்குமிடத்து ஏக்கர்ஒன்றுக்குச் சராசரியாய் 23 புசல் விளைந்திருக்கிறதென்றும் அரசாங்க காணிஅபிவிர்த்தித் தலைவர் தமதுபரிபாலன அறிக்கையிலே தெரிவித்திருக்கின்றார். அரிசிவிஷயமாய் இலங்கை தன்னிலேதானே தங்கியிருக்கவேண்டுமானால் ஏக்கர் ஒன்றுக்குத் தற்போதைய நெல்விளைவை 23 புசலிலிருந்து 49 புசலாக அதிகரிக்கச்செய்ய வேண்டுமென்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

## 32,850 தோன் அமெரிக்கஅரிசி

இவ்வருடம் ஆவணிமாசத்துக்கும் அடுத்தபங்குனிமாசத்துக்கும் இடைப்பட்ட காலத்துக்கென்று அமெரிக்கா மொத்தமாக 32,850 தொன் அரிசி இலங்கைக்கென ஒதுக்கிவைத்திருக்கின்றது. இந்தஅரிசி ஒவ்வொன்றும் 100 றுத்தல் கொண்ட 6,57,000 மூடைகளில் அனுப்பிவைக்கப்படவிருக்கிறது. காலஎல்லை வருகிற பங்குனிவரையில் குறித்திருந்தபோதிலும இலங்கை உணவுஅதிகாரிகள் இந்தஅரிசிமுழுவதையும் இவ்வருட இறுதிக்குள் இங்குபெறுவதற்கான ஒழுங்குகள் செய்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### பாப்பரசரின் புதியஸ்தானிகர்

சுகத்தாழ்வு காரணமாகத் தமது பதவியை இராசிநாமாச் செய்த மகாமேன்மைதங்கிய லேயோ கியர்க்கெல்ஸ் ஆண்டவரினிடமாக இந்திய அரசாங்கத்தினிடமாகப் பாப்பரசரின் ஸ்தானிகராக மகாமேன்மைதங்கிய மாட்டீன் லுக்காஸ்ஆண்டவர் நியமனஞ்செய்யப் பெற்றிருக்கிறாரெனப் புதியடில்லியிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவர் ஆடுலியாஸ்நகரின் கௌரவமாத்திரையான அதிமேற்றிராணியார். ஒல்லாந்திலே ஹார்லெம்நகரில் 1894-ம் ஆண்டு பிறந்தவர். 1944 ம் ஆண்டு முதல் ஓர் அதிமேற்றிராணியாராயும், தென்னாபிரிக்காவிலே அப்போஸ்தலிக்க ஸ்தானாபதியாயும் இருந்துவருகின்றார்.

### எட்டாவது கம்யூனிஸ்தர்

இத்தாலிய பாராளுமன்றத்திலே கற்றான்சரோ தொகுதிக்குக் கம்யூனிஸ்த பிரதிநிதியாக இருந்துவந்தவரான டக்றர் லூய்ஜி சிலிப்போ என்பவர் தாம கம்யூனிஸ்தகட்சியைக் கைநெகிழ்ந்து ஓர் கத்தோலிக்கராகிவிட்டதாகத் தெரிவித்து அம்மன்றத்தில் ஓர் பிரதிநிதியென்றமட்டிலே தமது இராசிநாமாவைச் சமர்ப்பித்தார். ஆனல், பாராளுமன்ற அங்கத்தவர்களில் பெரும்பான்மையினர் அவரது இராசிநாமாவை அங்கீகரிக்கமறுத்து வாக்களித்தனர். அதன்மேல் கம்யூனிஸ்த பிரதிநிதிகள் எதிர்ப்பேசிக்கொண்டு மன்றத்தைவிட்டு வெளியேறினர். சமீபகாலத்திலே முக்கியத்துவம்வாய்ந்த ஏழு இத்தாலிய கம்யூனிஸ்தர்கள் அக்கட்சியிலிருந்து விலகியிருக்கின்றனர். இது அத்தேச கம்யூனிஸ்தர்களுக்கெல்லாம் பெரிதும் மனக்குழப்பத்தை உண்டுபண்ணியிருக்கிறது.

### புதியகருதினல்மார்

பரிசுத்தபாப்பரசர் சிலதினங்களின்முன் ஒரேமுறையில் 24 புதியகருதினல்மாரை ஆக்கியிருப்பதானது பலவிசேஷங்களையும் அடக்கியுளளது. திருச்சபைச் சரித்திரத்திலே கருதினல்மார் ஒரேமுறையில் மிகப் பெருந்தொகையாக ஆக்கப்பெற்றிருப்பது இது மூன்றாம் முறையாகும். தற்போதைய பாப்பரசர் 1946-ம்ஆண்டு முதலாவது மிகப்பெருந்தொகையாய் 32 கருதினல்மாரை ஆக்கினர். இரண்டாவது மிகப் பெருந்தொகையாய் 1517-ம் ஆண்டு 31 கருதினல்மார் ஆக்கப்பட்டனர். எக்குவடோர், கலம்பியா, யூகோசிலேவியா எனும் மூன்றுநாடுகளும் கருதினல்மாரைக் கொண்டிருக்கப்போவது இதுவே முதன் முறையாகும். 24 புதிய கருதினல்மாரின் நியமனத்தாலே ஏறக்குறைய 250 வருடங்களுக்குப்பின் முதன்முறையாகக் கருதினல்மார்திருச்சங்கம் 70 அங்கத்தவரையும் பூர்த்தியாகக் கொண்டிருக்கப்போகிறது. பாப்பரசர் 1946-ம் ஆண்டு 32 கருதினல்மாரை நியமனஞ்செய்தபோது அத்திருச்சங்கத்தில் 70 பேரும் பூர்த்தியாய் இருக்கவேண்டுமெனக்கருதினர். ஆனல், புதிதாக அவர் புதிய கருதினலாக நியமித்த ஜெனேவாநகர பொலெற்ரே அதிமேற்றிராணியார் கருதினல்மார்திருச்சங்கம் கூடுமுன்னரே மரணமாயினர்.

### இரும்புத்திரைக் கருதினல்மார்

புதியகருதினல்மாராக நியமனம்பெறறிருப்பவர்களில் இரும்புத்திரைநாடுகளைச் சேர்ந்தவர்கள் இருவர். யூகோசிலேவியாவிலே கிறாஸிக்எனும் கிராமத்தில் ஓரளவுகைதியாகத் தனிக்கவிடப்பட்டிருக்கின்ற ஸ்ரீபினக் அதிமேற்றிராணியார் அவர்களில்ஒருவர். மற்றவர், போலாந்தின தலைப்பட்டணமாகிய வார்சோநகர ஸ்ரீபன் விசின்ஸ்கி அதிமேற்றிராணியார். இவர் சோவியற்வெளிநாட்டு மந்திரியான திரு. விஷின்ஸ்கியின் தூரஉறவினர். ஸ்ரீபினக் அதிமேற்றிராணியார் கருதினலுக்குரிய சின்னமாகிய செந்நிறச்சீராவைப் பெற்றுக்கொள்வதற்காக ரோமாபுரிசெல்லவும், பாப்பரசர் பிரதிநிதிஒருவர் அவரிடம் கொண்டுசென்று அதனைக் கையளிக்கவும் யூகோசிலேவிய சர்வாதிகாரியான மாஷல்ரிற்ரோ தடுத்துவிடலாமென்பது நிச்சயம். அல்லவென்று அதிமேற்றிராணியார் ரோமாபுரிசெல்ல அனுமதிக்கப்படுவாராயின் திரும்பவும் தமது சுவநாடுசெல்வது ஒருபோதுமே இல்லாக்கருமமாகும்.

### இத்தாலிய மாஜி பிரதமர்

வில்சன், லொயிட் ஜோர்ஜ், கிளெமென்சோ, ஓர்லான்டோ என்பவர்களாய் வேர்சேலிஸ்நகர சமாதானமகாநாட்டிலே கலந்துகொண்ட மாபெருந்தலைவர்கள் நால்வரிலும் கடைசியாகச் சிவந்தராயிருந்தவரான சிஞ்ஞோர் விற்ரோறியோ இம்மானுவேல் ஓர்லான்டோ அவர்கள் சிலதினங்களுக்கு முன்னதாகவே அந்தியதேவதிரவிய அனுமானங்களைப்பெற்றுச் சமீபத்தில் மரிக்கலாயினர். பரிசுத்தபிதாவும் தமதுவிசேஷ ஆசீர்வாதத்தை இவருக்கு அனுப்பிவைத்தார். முதலாவது உலகயுத்தம் நிகழ்ந்தகாலத்திலே இத்தாலிய பிரதமராயிருந்த சிஞ்ஞோர் ஓர்லான்டோ அவர்கள் பரீஸ்நகர சமாதான மகாநாட்டில் சமூகமாயிருந்தபோது லத்தறன் உடன்படிக்கை நடைபெறச்செய்து, அத்தாலே வத்திக்கான்நகரை ஓர் இராச்சியமாக அமைக்கும்படி செய்த சமரசப்பேச்சுகள் ஆரம்பமாகத் துணைச்செய்யலாயினர்.

### கத்தோலிக்க மந்திரியார்

ஐக்கியஅமெரிக்கதேச புதிய ஜனதிபதியாகத் தெரியப்பெற்றுள்ள ஜெனறல் ஐஸன்ஹாவர் அவர்கள் தமது மந்திரிசபையிலே ஓர்கத்தோலிக்க தொழில் ஐக்கியதலைவரான திரு. மாட்டீன் டேர்க்கின் அவர்களைத் தம்முடைய தொழில்மந்திரியாகத் தெரிவுசெய்திருக்கின்றார். இது குடியரசுக்கட்சியிலே ஓர் பெரும் அரசியற்கலக்கத்தை உண்டுபண்ணிவிட்டிருக்கிறது. புதியஅரசியல் நிர்வாகத்தில் ஒரேயொரு கத்தோலிக்கராகத் தெரிவுசெய்யப்பெற்றுள்ள இவர் அமெரிக்க தொழிற்சம்மேளனத்தில் ஓர் அங்கத்தவரும், சனநாயககட்சியிலே பலமிகக ஓர் அங்கத்தவருமாவர். ஜனதிபதித் தேர்தலிலே இவர் கவர்னர் ஸ்ரீவென்சன் அவர்களுக்கு வாக்களித்திருந்தார்.

# உண்டோ சொல்லுவீர்!

1. வாழ்வினிறுதிக் கட்டமான மரணந்தன்னை மறந்துநீர்
   சூழுப்புவியில் வாழ்பவர்க்கோர் சுகமுமுண்டோ
   சொல்லுவீர்!
2. ஏந்துஞ்செங்கோ லாணையாலே எட்டுத்திசையும் கட்டியாள்
   வேந்தும்மரணந் தனக்குத்தப்பி வாழ்ந்ததுண்டோ
   சொல்லுவீர்!
3. செல்வரென்ன! வறிஞரென்ன! தீரரென்ன வீரரென்!
   வெல்வரோசொல்! மரணந்தன்னை! வேதவாக்கும்
   பொய்க்குமோ?
4. ஆறிலுண்டு! நூறிலுண்டு! அந்தோ! தாயின் கர்ப்பமும்
   கூறிலுண்டு! மரணம்வந்து கொண்டுசெல்வ துண்டுமே
5. சிந்தியாத நேரந்தன்னிற் திருடன்போலத் தேடியே
   வந்தெம்மாவி கவர்ந்துசெல்லும் மாயக்காலன்
   இல்லையோ?
6. அன்புமின்றி அருளுமின்றி ஆசையொன்றி நீதியாம்
   பண்புநுன்றி வாழ்பவர்க்கோர் பாடமூட்டும் மரணமே!
7. நீரிற்குமிழி யானவாழ்வை நிலையென்றெண்ணி
   உலைவதேன்?
   பாரிற்சாவை நினைக்கினென்றும் பாவமில்லை யில்லையே
8. காட்டிலோநம் வீட்டிலோசெல் ரோட்டிலோஎப்
   பாட்டிலோ
   கூட்டிச்செல்லும் மரணம்வாழ்வின் குறிக்கோளாகக்
   கொள்வமே
9. மக்கள்மறந்து வாழினுந்தான் மரணம்மறந்தும்
   இருக்குமோ?
   பக்கம்வந்து நிற்குதென்றே பார்த்தல்கடன் யார்க்குமே
10. சொல்லும்பொருளும் எட்டாஈசன் துணையால்வாழ்வைத்
    தாண்டுவோம்
    அல்லும்பகலும் நல்லமரணம் அதனுக்காக
    வேண்டுவோம்

"ஞானி"

## ஆகமன காலத்தின்
# 4-ம் ஞாயிறு

சுவிசேஷ வாசிப்பு

(லூக். 3:1—6)

திபேரியுசென்னுஞ் சேசாருடைய இராசாங்கத்தின் பதினைந்தாம் வருஷத்தில் போஞ்சு பிலாத்து யூதேயா தேசத்துக்கு அதிபதியாகவும், ஏரோது கலிலேயாநாட்டுக்குக் காற்பங்குஅதிபதியாகவும், அவன் சகோதரனகிய பிலிப்பு இத்துரையா நாட்டுக்குந் திரோகோனிதி நாட்டுக்குங் காற்பங்கு அதிபதியாகவும், லிசானியாசென்பவன் அபிலின் நாட்டுக்குக் காற்பங்கு அதிபதியாகவுமிருக்க, அன்னஸ், கைப்பாஸ் என்பவர்கள் பிரதான ஆசாரியர்களாயிருந்த காலத்தில் வனந்தரத்தில் சக்கரியாவின் குமாரரான அருளப்பருக்கு ஆண்டவருடையவாக்கியம் உண்டாகவே, அவர்யோர்தான் நதியின் நாடுகளுக்குளெல்லாம் வந்து பாவவிமோசனத்துக்கென்று பச்சாத்தாபத்தின் ஞானஸ்நானத்தைப் பிரசங்கித்தார். இப்படி நடக்குமென்று இசையாஸ்தீர்க்கதரிசியின் வாக்கியாகமத்தில் எழுதியிருந்தது. அது என்னவென்றல், ஆரணியத்தில் கூறுகிறவனுடைய குரலொலியாவது: ஆண்டவருடைய வழியைமுஸ்திப்புச்செய்யுங்கள்; அவருடைய பாதைகளைச்செவ்வைப்படுத்துங்கள். பள்ளத்தாக்குகளெல்லாம் தூர்க்கப்படும். மலையுங்குன்றுமானதெல்லாந் தாழ்த்தப்படும். கோணலானவைகள் செவ்வையானவைகளாகவும், கரடானவைகள் சமமானவழிகளாகவும் ஆக்கப்படும். எந்தமனிதனும் கடவுளின்வரமாகிய இரட்சணியத்தைக் காண்பான் என்பதாம்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக!

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

சங். அல்போன்சா சகோதரி மூலம் கேட்டுக்கொண்டமன்றாட்டுக் கிடைக்கப் பெற்றமையால் நேர்த்திப்படி இதனைப் பிரசுரம்செய்விக்கின்றேன். அவளின் நாமம் உலகமெங்கும் புகழப்படக்கடவதாக.

கண்டி எஸ். ஜி.

— புதிய கருதினல்மாருளெல்லாம் அதிகம்விருத்தாப்பியர் பிரான்ஸ்தேச லெமான்ஸ்நகர் அதிமேற்றிராணியாரான கிறெஸ்ரே ஆண்டவரே. இவருக்குத் தற்போதுவயது 80. 1556-ம் ஆண்டுக்குப்பின் லெமான்ஸ் நகர் ஒருகருதினலைப்பெற்றிருப்பது இதுவே முதன்முறையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மார்கழி மாதம்

சேப அப்போஸ்தலர் சபைப் போதுக்கருத்து: தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டவர்கள், அகதிகள் இவர்களின் கஷ்டநிவாரணத்துக்காக வேண்டிக்கொள்ளுதல்.

மிஷன்கருத்து: அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளிலுள்ள மாணவர்கள் மத்தியிலும், தொழிலாளர்கள் மத்தியிலும் அப்போஸ்தல அலுவல் விருத்தியடையும்படியாக மன்றாடுதல்.

### திருநாள் அட்டவணை

மார்கழிமாதம் — 1952

| | | | |
|---|---|---|---|
| வெ | 19 | அ. திமொத்தேயு | (ஊ) |
| சனி | 20 | அ. சாமிநாதர் | (ஊ) |
| ஞா | 21 | ஆகமனகால 4-ம் ஞாயிறு — | (ஊ) |
| திங் | 22 | அ. தோமையார் | (சி) |
| செ | 23 | அ. செயம்மாள் | (ஊ) |
| புத | 24 | அ. தார்சிலம்மாள் | (ஊ) |
| வி | 25 | கர்த்தர் பிறந்ததிருநாள் | (வெ) |

சத்தியவேத
பாதுகாவலன்
1952-ம் ஆண்டு
மார்கழிமாதம் 18-ந் திகதி

வண. எல். கிற்றேசுவாமிகளின்

## தேகவியோகம்

நமது மேற்றிராசனத்திலே, மேற்றிராணியாண்டவரின் நிவாசத்திலே ஓர்மகாரிஷிபோலும், தவமுனிவர்போலும் மனோகரகாட்சியளித்து, எவருமேகையெடுத்து அன்புபாராட்டத்தகும் ஓர்குருமுனிவராய்விளங்கிவந்து, தமதுஉடல்பொருள ஆவி மூன்றினையும் அமலனின் சேவைக்கென அர்ப்பணஞ்செய்து தேவதோத்திர வாஞ்சையோடும், ஆன்மஇரட்சணிய அபேட்சையோடும் அரைநூற்றாண்டுக்குமேல் அயராதுழைத்துவந்து, தமது குருத்துவ தங்கயூபிலியையும் தேவதயவால் கண்டுகொள்ளும் பாக்கியத்தை அடைந்து, கடைசியாக நரைதிரைகண்டு, தபோதனர் வடிவங்கொண்டு, எமது குன்றாத அன்புக்கும், குறையாதநன்றிக்கும் என்றுமே பாத்திரமான குருதிலகமாக எம்மத்தியில் திகழ்ந்த வண. எல். கிற்றேசுவாமியவர்கள் அந்தியநோய் கண்டிருந்து சென்ற 14-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6-30 மணியளவில் காலஞ்சென்றாரெனும் துயரசெய்தியைப் பெரிதும்கவலையுடன் தெரிவிக்கின்றோம். மரிக்கும்போது சுவாமிகளுக்குவயது 78.

வண. லூயிஸ் மரியே கிற்றே சுவாமிகள் பிரான்சிலே லீயேஜ் நகரில்விளங்கும் பேரான குருமடத்திற்படித்து, 1901-ம் ஆண்டு ஆடிமாதம் 7-ந்திகதி குருப்பட்டம்பெற்று, அவ்வாண்டிலேயே ஓர் அமலோற்பவி சபைக் குருவராய் யாழ்ப்பாணம் வந்தார். அவர் இங்குவந்தபின் ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, சில்லாலை, இளவாலை ஆகிய விசாரணைப்பங்குகளிலே 1917-ம் ஆண்டுவரை திருத்தொண்டாற்றிவந்தார். அதன் மேல் கடந்த 4½ வருடங்களாக அவர் மேற்றிராசன மாளிகையில்வதிந்து, மேற்றிராசன ஆலோசனைச்சங்க அங்கத்தவராகவும், சுப்பீரியராகவும், விக்கார் ஜெனறலாகவும், ஐந்து முறைகளிலே இம்மேற்றிராசன பரிபாலனராகவும், புறோக்கியூறேற்றர்ஜெனறலாகவும்உந்நத அதிகாரபதவிகளைக் கண்ணியமாகவகித்திருந்து, எவ்வெவராலுமே பெரிதும் அன்பு பாராட்டவும், நன்குமதிக்கவும் பெற்றுவந்தார். எமது மேற்றிராசனத்திலே இத்தகைய பெரும் அதிகாரபதவிகள் அனைத்தையும் ஒருங்கேவகித்திருந்த -மேற்றிராசனமாளிகையிலேயே அதிகாரபதவிவகித்து அத்துணை நெடுங்காலம்வசித்திருந்த குருமார் அரிதிலும் அரிதேயென்று நினைக்கும்படியான—நினைந்து வியக்கும்படியான சுவாமியவர்கள் ஓர்பெரிய கல்விமானென்று கருதப்பட்டவருமன்று. சர்வகலாசாலைப் பட்டமெதுவும் பெற்றுக்கொண்டவருமன்று. ஆனல், அவரில் விளங்கிய மதியூகமும், மற்றும் அரிதான குணவிசேஷங்களுமே அவற்றிற்கெல்லாம் காரணமன்றிப் பிறிதொன்றுமன்று. அன்பும், அனுதாபசிந்தையும், ஆய்ந்தோய்ந்து செயலாற்றும் அருந்திறமையும், சிவகாருண்யமும், அமைதியானபோக்கும், பரந்தநோக்கும் ஆதியனவெல்லாம் அவரில் சுபாவமாகவே அமைந்துள்ள சிறந்தசுகுணங்களாகும்.

தமதுமுகத்தில் எப்போதுமே அமைதியும்சாந்தமும அரசாளக் காட்சியளிக்கும் சுவாமியவர்களை முந்தச்சந்திககுமிடத்து, அவரது மொழிகளைக்கவனிக்குமிடத்து அவர்கடுங்கோபமுடையவரென்றும், கடுமொழி பகருகிறவரென்றுமே எவரும் கருத்திற்கொள்வர். ஆயினும் பிந்த அவரது புன்தவதனத்திற்தவழும் புன்முறுவலையும், அன்புததும்பும் இன்பமொழிகளையும் அவதானித்துப் பெரிதும் அதிசயமுற்றவர்களாய் அவரை மனமாரவாழ்த்திக்கொண்டேசெல்வர். புறத்தே முள்ளுடைய பலாப்பழமானது அகத்தே மதுரமான சுவைபொருந்திய சுளையைக்கொண்டிருப்பதுபோலச் சுவாமிகளும அத்துணை மதுரமான சுபாவமுடையவரென அன்ரொருநாள் காலங்கண்ட குருப்பிரசாதி ஒருவர்கூறியின்றமையும் ஈண்டு குறிப்பிடததக்கது. குருமாரோ அன்றேல் தமக்குக்கீழுள்ள பணியாளரோ நோய்வாய்ப்படும்போது அல்லது கஷ்டப்படும்போது அவர் பெற்றதாய் தந்தையிலும் மிக்கபேரன்புடன் காண்பித்துவந்த உருக்கமான பற்றுதலோ உரைக்கற்பாலதன்று. மிகவும் பொறுப்புவாய்ந்த பதவிகளை நெடுங்காலம் வகித்து இம்மேற்றிராசனத்தின் பொருளாதார விஷயமாயும், பிறவிஷயமாயும் சுவாமிகள் ஆற்றியுள்ள போற்றற்பால பெரும்பணிகள் இம்மேற்றிராசனசரித்திரத்தில் பொன்னட்சரங்களால் பொறிக்கப்படத்தக்கனவேஎன்க.

மரித்தபின் சுவாமிகளின் சரீரம் குருத்துவ அங்கிகள் தரிக்கப்பெற்று மேற்றிராணியாண்டவரின் சிற்றாலயத்தில் வளர்த்தப்படவே, குருமாரும், பிறரும் கூட்டம்கூட்டமாகச்சென்று அவருக்குத் தங்கள் கடைசி வணக்க மரியாதையைத் தெரிவித்து, அவரது ஆன்மசாந்திக்காகமன்றாடிவந்தார்கள். சாயந்தரம் 4-30 மணிக்கு அவருடைய மேனியானது ஆசனக்கோவில் கொண்டுசென்று உயர்மேடையில் வைக்கப்படவே, அசாவாநகர் மேற்றிராணியாரும், நாற்பதுகுருமாரும், கன்னியாஸ்திரீமாரும், விசுவாசிகளுயாகப் பெருந்திரளானோர் அங்குசமூகமாக நம்மேற்றிராணியாண்டவர் துக்கசங்கீதங்கள்பாடி, அந்திமதிருச்சடங்குகள் நிறைவேற்றிநின்றார். அதன்மேல் சுவாமிகளின்சரீரம் பெருமூர்வலமாகத் துக்கசிதங்கள், செபவேண்டுதல்கள் மத்தியிலே சேமக்காலை கொண்டுசென்று, ஆண்டவர் அவர்கள் கடைசி ஆசீர்வாதம் கூறிநிற்கப் பூமிதானஞ் செய்யப்படலாயிற்று. சுவாமிகளின் மரணத்தாலே எமது மேற்றிராசனத்தில் வேதச்சுடராய்விளங்கிய வேதியர்திலகம் ஒன்று — அஃதோ! நமது மேற்றிராசனமாளிகைச் சுற்றுச்சாலைகளிலே செபமாலையும் கையுமாய் உலாவிக் காட்சிதந்து காணுந்தோறும் ஆசீர்வாதம்கூறிவந்த தேசிகர்திலகம் ஒன்று நமது முகக்கண்முன்பாக மறைந்துவிட்டதே என்பதை நினைக்குந்தோறும் உளத்திற் கவலை பெருகாமலில்லை. ஆனல், அவரின் திருவுருவமானது நம்முடைய மனக்கண் முன்பாக உற்றநாள்வரை ஒருபோதுமே மறையப்போவதேயில்லை.

R. I. P.

## வானொலியில் வானொளி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

“தரித்திரரே, நீங்கள்பாக்கியவான்கள், ஏனெனில், சர்வேசுரனுடைய இராச்சியம் உங்களுடையதாயிருக்கிறது. இப்போது பசித்திருக்கிறவர்களே, நீங்கள்பாக்கியவான்கள், ஏனெனில், திருப்தியடைவீர்கள். இப்போதுஅழுகிறவர்களே, நீங்கள் பாக்கியவான்கள், ஏனெனில், களிப்படைவீர்கள். மனுமகனைப் பற்றி மனிதர் உங்களைப் பகைத்து உங்களை விலக்கித் தூஷித்து உங்கள்நாமம் கெட்டதென்று தவிர்க்கும்போது நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள். அந்நாளிற் சந்தோஷித்து அக்களியுங்கள். ஏனெனில், இதோ பரலோகத்தில் உங்கள் சம்பாவனை மிகுதியாயிருக்கிறது. அதே பிரகாரமாய் அவர்களுடையபிதாக்கள் தீர்க்கதரிசிகளுக்குச் செய்துவந்தார்கள். ஆயினும் திரவியவான்களே! உங்களுக்கு ஐயோகேடு. ஏனெனில், உங்கள் ஆறுதலையே பெற்றிருக்கிறீர்கள். திருப்தியடைந்திருக்கிறவர்களே! உங்களுக்கு ஐயோகேடு. ஏனெனில், பசித்திருப்பீர்கள். இப்போது நகைக்கிறவர்களே! உங்களுக்குஐயோகேடு. ஏனெனில், துக்கித்து அழுவீர்கள். மனிதர் உங்களைப் புகழும்போது உங்களுக்கு ஐயோகேடு, ஏனென்றால இதே பிரகாரமாய் அவர்களுடைய பிதாக்கள் கள்ளத் தீர்க்கதரிசிகளுக்குச் செய்துவந்தார்கள்.”

(அர்ச். லூக். 6: 17-26.)

ஜெனெசரெத் ஏரிக்கரையையொட்டிக் குன்றுகளிடையேயுள்ள ஒருபீடபூமியில் மாபெரும் சனக்கூட்டம் குழுமியுள்ளது. கலிலேயாநாட்டுக் கிராமங்களிலிருந்து மட்டுமன்றி, அதன் எல்லையையொட்டியுள்ள மாகாணங்களிலிருந்தும், யூதேயாவிலிருந்துங்கூடச் சனங்கள் வந்திருக்கின்றனர். இந்தப் புதிய தீர்க்கதரிசி போதகஞ்செய்யத் தொடங்கி ஆறுமாதமிருக்கும். அவர் வாயிலிருந்துவந்த வார்த்தைகளின் ஆழ்ந்த கருத்துக்களும், அவர்செய்த பலபுதுமைகளும் மக்களை அவர்பால்ஈர்த்தன. தங்கள் தந்தையாகிய அபிரகாமுக்குத் தேவன் அளித்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற ஒருமெசியாஸ் வருவாரென்று இஸ்ராயேல் குலத்தின் தீர்க்கதரிசிகள் சொல்லியிருக்கிறார்களே; இவரே அந்த மெசியாஸாக இருக்கக்கூடுமோ வென்று மக்களிற்பலர் பேசிக்கொள்ளுகின்றனர். “தேவனுடையஇராச்சியம் சமீபித்துள்ளது” என்று இவரே பலதடவைகளில் சொல்லவில்லையா?

(தொடரும்)

### லங்கா நாயகியின் திருச்சுரூபம்

கோவைமா நகரிலிருந்து லங்காமாதாவின் திருச்சுரூபம் சென்றவியாழக்கிழமை கொழும்புத் துறைமுகம் வந்துசேர்ந்து அன்று சாயந்தரம் ஆசார மரியாதையுடன் கரைக்குக் கொண்டுவரப்பட்டபோது, குருசிரேஷ்டர்களும், குருமாரும், பாப்பரசரின் நைற்பட்டவர்த்தனர்களும், சப்பிறீங்கோட்டுநீதியாசர்களும், பிறநாடுகளின் ஸ்தானிகர்களும், செனற்றர்களும், பாராளுமன்றப்பிரதிநிதிகளும், மற்றும் பெருந்திரளான மக்களும் அங்குகாத்துநின்று தமது வந்தனோபசாரங்களைச் சமர்ப்பித்து, ஆடம்பர பக்திச்சிறப்புகளோடு மாதாவைவாழ்த்திப்போற்றி வழிபட்டு நின்றார்கள். கவர்னர்-ஜெனறலின் பதிலாளியாக மேயர் ஈ. என். எல். வென் அவர்கள் சமுகமளித்திருந்தார். கொழும்பு அதிமேற்றிராணியார் திருச்சுரூபத்தைக் கரைக்குக் கொண்டுவந்ததும் “ஆவே மரியா” எனும் கீதத்தை அங்குசமூகமானோர் ஆனந்தமாகப்பாடிநிற்க, கொழும்பு அதிமேற்றிராசன கத்தோலிக்க ஐக்கியசங்கத்தின் தலைவரான சேர் எட்வாட் ஜயதிலக அவர்கள் உணர்ச்சிததும்பஓர்சொற்பொழிவாற்றி அதனை வரவேற்றுநின்றார். பின்னர் அதுமாபெரும்ஊர்வலமாகச் சந்தலூசியாவின் அதிமேற்றிராசனக் கோவில் கொண்டுசென்று அங்குவெளிமைதானத்தில் ஸ்தாபிக்கப்பட்டதும் திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்படலாயிற்று. பின்னர்மறுநாள்சாயந்தரம் 150 கார்கள்முன்செல்லத் திருச்சுரூபம் தேவத்தைத்திருசேத்திரம்போய்ச் சேர்ந்து அங்கும்பெருமிதஆடம்பர வைபவங்களுடன் வரவேற்கப்படலாயிற்று.

### யா. மே. சேமலாப சங்கம்

நத்தார் – புதுவருட விடுமுறையை முன்னிட்டு இச்சங்கக்தோர் மார்கழி மாசம் 25-ந் திகதிதொடக்கம் 1953-ம் ஆண்டு தைமாசம் 2-ந் திகதி முடிகிற வரையில் பூட்டப்பட்டிருக்கும்.

காரியதரிசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சதா சகாய மாதாவின் கோணம்

தேவதாயார் தெரிவித்துள்ள செய்திகளின் மற்றிருஅம்சங்களும் செபமாலையும், மாசில்லா இருதயப் பத்தியுமாம். இவை ஒன்றுக்கொன்று ஆதாரமாகும். எங்களை மரியாயின் மாசில்லா இருதயத்துக்கு ஒப்புக்கொடுக்க வேண்டுமேயாயின் எங்களிடத்தில் இருதயபூர்வமான, பிள்ளைக்குரிய பத்திவிசுவாசம் காணப்படவேண்டியது அவசியமாகும். சதா சகாயமாதாவின் படத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டிய முக்கிய பாடம் இதுதான். எங்கள் இக்கட்டு இடைஞ்சல்களில், எங்கள் அவசரங்களில் பிள்ளைக்குரிய நம்பிக்கையுடன் நாம் அவவுடையசலுகையைநாடி, அவவண்டை ஓடிப்போக வேண்டுமெனப் படிப்பிக்கின்றது. அவமட்டிலே நாம்கொண்டிருக்கும் உண்மையானபத்திக்கு அத்தாட்சிஇதுதான். செபமாலையே தேவதாயாருக்கு அதி உகப்பான பத்திமுயற்சியாகையால், அதன்மட்டில் உருக்கமான அன்பும், பற்றுதலும் வையாதஎவரும் தேவமாதாவின் பிரியதாசராக இருக்கமுடியாது. நாம் செபமாலையைப் பத்தியாகஓதும்போது நாம் அவவுடைய சலுகையைத்தேடுகிறோம். எங்களை அவவின்கண்காணிப்புக்கும், பாதுகாப்புக்கும் ஒப்புக்கொடுக்கிறோம். தேவதாயார்கொடுத்துள்ள காட்சிகளிலெல்லாம் செபமாலைசெபிப்பதின் முக்கியத்துவத்தைப்பற்றி வெகுஅழுத்தமாக வற்புறுத்திக்கூறியிருக்கிறா. எனவே, மரியாயின் மாசில்லா இருதயத்துக்கு நம்மைஒப்புக்கொடுப்பதும், செபமாலை ஓதுவதும் ஒன்றோடொன்று தொடர்புடையனவாக இருப்பதைக் காணக்கூடியதாக விருக்கின்றது.

இதைத்தவிர, சதாசகாயமாதாவின் படம் நாம் பத்திவணக்கமாகச் செபமாலைஓதுவதற்கு வல்லபமிக்க உதவியாகவும் இருக்கின்றது. எப்படியெனில், செபமாலையின்போது நாம் தியானிக்கும் பரமஇரகசியங்களிற்பல மனதிற்பதியக்கூடியவிதமாகப் படத்திற் தீட்டப்பட்டிருக்கின்றன. களிகூர்ந்த காரணிக்கங்களிற்சிலவும், வியாகுலகாரணிக்கங்கள் முழுவதும் எம் கண்முன்பே காட்சிஅளிப்பதுபோல இருக்கின்றது. தேவபரமஇரகசியங்களைத் தியானிப்பதற்கும், அதனுற் பலன் அடைவதற்கும் இது மிக்கஒத்தாசையளிக்கின்றது.

சதாசகாயமாதாவின் உலகப் பிரசித்திபெற்ற, புதுமையுள்ள இந்தப் படத்தின் ஆரம்பம், சரித்திரவரலாறு, படிப்பினைகள்எல்லாம் சுருக்கமாக அறிந்துகொண்டோம். மனித இருதயங்களை எல்லாம் தன்பக்கமாகக் கவர்ந்துகொள்ளும் அபாரசக்தி தேவதாயாருக்கு உண்டென்பதற்குச் சதாசகாயமாதாவின்மாட்டு உலகெங்கும் பரவி, அளப்பரிய ஆத்துமசரீரநன்மைகளை மண்மாரி மழைமாரியாகச் சொரிந்துகொண்டிருப்பதற்குக் காலாயிருக்கும் சதாசகாயமாதாவின் பத்திமுயற்சி தக்கசான்றுகஇருக்கிறது.

ஆகவே, இந்தஆண்டவளை அண்டிப் போவோமாக! எங்கள் துன்பதுயரங்களை அவவிடம் சொல்லுவோமாக! எங்களுக்குத்தேவையான இகபர நன்மைகளை எங்களுக்கு அடைந்து தரும்படி அலட்டிஅலட்டி அவவைக் கேட்போமாக! நமக்கு நலமெனக் காணும் எதையும் தமதுதிருக்குமாரனிடமிருந்து பெற்றுத்தர, ஓயாதுஎங்களுக்கு உதவிபுரியச் சதாசகாயமாதா காத்துக்கொண்டிருக்கிறா. சதாசகாயமாதாவே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

# கிறிஸ்மஸ் வெகுமதி

மார்கழிமாதத்தில் ஒருநாள் மாலைநேரம். அந்தக்கோவிலில் இருள் படர்ந்திருந்தது. பீடத்தின்அருகில் மாத்திரம் வாடாவிளக்கின்உதவியால் கொஞ்சம் வெளிச்சமாய் இருந்தது. விசுவாசிகள்சிலர் செபித்துக்கொண்டிருந்தனர். பீற்றர்என்னும்சிறுவன் நற்கருணைக்கிராதியருகில் முழந்தாளிட்டிருந்தான். திவ்விய நற்கருணைப் பேழையை விடாதுநோக்கி யேசுவை நேசத்துடன் ஆராதித்துநின்ற அவனுக்கு வயது பதினைந்து. தொழிலாளி ஒருவரின் மகன்அவன். படிப்பில் கெட்டிக்காரன். எப்பொழுதும் கீழ்ப்படிந்துநடப்பான். தாழ்ச்சியுள்ளவன். பாடசாலையில் நடைபெறும்விசேஷங்களில் பெரியஇடத்தை ஒருபோதுமே அவன்விரும்பமாட்டான். மற்றவர்களை மகிழ்விப்பதென்றால் அவனுக்குஆனந்தம். ஒவ்வொருநாளும் மாலையில பாடசாலையிலிருந்து வீட்டுக்குத்திரும்புகையில் ஆர்ச். அஞ்ஞசமமாவின் ஆலயத்திலே ஒருமணிநேரம் யேசுவுடன்செலவழிப்பான். அதைத்தான் மிக உல்லாசமானநேரமாக அவன் கருதுவான்.

அன்றுமாலைஅவன் கோவிலில் முழந்தாளிட்டிருக்கையில் அவன்முகத்தில் துயர்படர்ந்திருந்தது. ஏனெனில், அவன் இனிமேல் தனது உத்தமநண்பரோடு ஒவ்வொருநாளும் ஒருமணி நேரம் செலவழிக்கமுடியாது. கிறிஸ்மஸ்பண்டிகைவிடுமுறை சீக்கிரம்ஆரம்பமாகும். தைமாதத்திலிருந்து அவன் பாடசாலைசெல்ல முடியாது. தனது தகப்பனுடன் வேலைக்குப்போகவேண்டும். ஓர்குருவாக வேண்டுமென்பது பீற்றரின் ஆசை. இந்தஆசைநிறைவேற அவன்பெற்றோரும் பிரயாசப்பட்டனர். ஆனால், தன்பெற்றோர் இருந்த நிலைமையைப்பார்த்த அவன் மனம் கேட்கவில்லை. தனது தம்பியர் தங்கையர் உலகில் நல்லநிலைமையில் இருக்க வேண்டுமானால் அவன் தன் ஆசையைச் சிலகாலமாவதுமறந்து தன் பெற்றோருக்கு உதவிசெய்யவேண்டும். அவன் உலகிலிருந்து பெற்றோருக்கு உதவி செய்வதே தேவசித்தமெனச் சிரேஷ்டர்கள் அறிவித்தார்கள். தனது ஆசை நிறைவேறாமற்போனதை நினைந்து அவன்வருந்தினான். எனினும், தேவசித்தத்துக்குப் பணிவதைவிட வேறு என்னவழி இருக்கிறது? "நேசஆண்டவரே! என்நிலையை நீர்நன்றாக அறிந்திருக்கிறீர். உமது சித்தத்தின்படி நான் நடப்பேன்" எனப் பீற்றர் கூறினான்.

ஒருமணிநேரம் சென்றது. அவன் வீட்டுக்குப்போக எழுந்தான். வெளியேஎங்கும் மூடுபனி பரவியிருந்தது. எங்கும் ஒரேகுளிர். மேற்சட்டையைஇழுத்து நன்றாகமூடிக்கொண்டான். வீட்டிற்சேர்ந்ததும் நெருப்பண்டையில் உட்கார்ந்து குளிர்காயலாம் என்றநினைவுடன் விரைந்துசென்றான். இருண்ட ஒருபாதையாற் செல்கையில் யாரோசிணுங்கிஅழும் சப்தம்போற்கேட்டது. பீற்றர்முதலில் அதைப் பொருட்படுத்தவில்லை. திரும்பவும் அதேசத்தம். உடனேஅவன் மெதுவாகச் சீழ்க்கையடித்தான். ஒருநாய் குரைத்தசத்தம் கேட்டது. சப்தம்வந்த திசையிற்போய் அங்குமிங்கும் தடவிப்பார்த்தான். ஒருநாய் காயப்பட்டுத் தரையில் உடல்நடுங்கிக் கொண்டு கிடந்தது. அதைப் பதனமாகத்தூக்கித் தன் மேற்சட்டையின் கீழ்ப் பத்திரமாக வைத்துக்கொண்டு வெளிச்சத்தில்பார்த்தான். கழுத்துப் பட்டிகையில் நாயின்பெயரும், அதன் சொந்தக்காரரின் விலாசமும் எழுதியிருந்தது. "பெடி; சொந்தக்காரர்: ஜோர்ஜ் பிறேசர், 12, பார்க்வீதி."

"பெடி, உன்னைஉடனே உன்வீட்டில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுகிறேன்" எனப் பீற்றர்சொல்லிப் பார்க்வீதியைத் தேடிப்போனான். 12-ம் நம்பர்வீடு பெரியவீடு. அழகாகக் கட்டப்பட்டிருந்தது. வாசல் மணியை அடித்தான். பெரியவர் ஒருவர்வந்து கதவைத்திறந்து "என்னவேண்டும்?" என்று சிறிதுகோபத்துடன் கேட்டார். அவருடையகுரலைக் கேட்டதும் பெடி என்றநாய் சந்தோஷத்துடன் குரைத்தது. உடனே பெரியவரின்கோபம் பறந்துவிட்டது. சாந்தத்துடன் "பெடி வந்துவிட்டதே" என்றார்.

"ஆம்ஐயா, அதற்குக் கடுங்காயம் போல் தெரிகிறது" எனப் பீற்றர் மொழிந்தான்.

"ஐயோ பாவம்" எனச் சொல்லிக்கொண்டே பிறேசர் அவன்கையிலிருந்து நாயைவாங்கி, "ஏதாவது சம்பாவனையை எதிர்பார்க்கிறாய்போலும்" என்றார்.

"இல்லை, மெத்தநன்றிஐயா. எனக்கு ஒன்றும்வேண்டாம். பெடி சீக்கிரம் சுகம்பெறும்என நம்புகிறேன்."

"ஓ, சரியாய்ப்போகும். சற்று உள்ளேவந்து, பெடி அகப்பட்டவிதத்தைச் சொல்."

பீற்றர் அதைச்சொல்லிமுடித்ததும், "நீ கத்தோலிக்கனா?" என்று பிறேசர் கேட்டார். அவன் ஆம்என்றதும், "கர்த்தர்பிறந்த பண்டிகைக்கும், விடுமுறைகாலத்துக்கும் நீ ஏதோபெரிய யோசனையெல்லாம் செய்திருப்பாயே" என்றார்.

"விடுமுறைகாலம் தொடங்கியதும் நான் வேலையிலப் போகவேண்டும்" எனப் பீற்றர் கூறினான்.

அவன்குரலில் தொனித்த விசனத்தைக் கவனித்த பிறேசர் காரணத்தை வினவினார். குருவாகத் தனக்கிருக்கும்ஆசையையும், அதுநிறைவேறாது போன காரணத்தையும் பீற்றர் எடுத்துரைத்தான். பிறேசர் மௌனமாய் அதைச் செவிகொடுத்துக் கேட்டார். அவன் தன்வரலாற்றைக் கூறிமுடித்த பின்னும் அவர்பேசவில்லை. "ஐயா! நேரமாகிறது வீட்டுக்குப்போகவேண்டும்" என்றுசொல்லிப் பீற்றர் எழுந்தான்.

"தம்பி! உன் விலாசத்தைக் கொடுத்துவிட்டுப்போ. 'பெடி'யை நீ காப்பாற்றியதற்காக ஒருகிறிஸ்மஸ் வெகுமதி அனுப்பப்போகிறேன்" எனப் பிறேசர்கூறினார். பீற்றர் தனதுவிலாசத்தை எழுதிக்கொடுத்துவிட்டுத் தனதுவீட்டுக்கு விரைந்துசென்றான். மகனைக்காணோமேஎன்று வீட்டிலெல்லோரும் கவலையோடு காத்துக்கொண்டிருந்தார்கள்.

கிறிஸ்மஸ்விழாவுக்கு முந்தினதினம். பீற்றர் வீட்டைஅலங்கரித்துக்கொண்டிருந்தான். எல்லோரும் நடுச்சாமப் பூசைக்குப் போனார்கள். பீற்றர், அவன்பெற்றோர், சகோதரிஆகியோர் திவ்வியநற்கருணைவழியாகச் சின்ன யேசுவைத் தங்கள் இருதயத்தில் எழுந்தருளச்செய்தார்கள்.

விழாவன்றுமத்தியானம் யாவரும் பகற்போசனம் அருந்துகையில் யாரோ வந்து பீற்றரின் வீட்டுமணியை அடித்தார்கள். வந்திருக்கிறது யாரென்று பார்க்கும்படி அவன்தங்கை கிற்றி சென்றாள். "அப்பா! ஒருபெரியவர் உங்களைப்பார்க்க வந்திருக்கிறார்" எனக் கிற்றி சொன்னதும் பீற்றரின் தந்தை அது யாராயிருக்கும்என்று நினைத்துக் கொண்டே போனார். வந்திருந்தவர் அவருக்குத் தம்மை அறிமுகப்படுத்தினார். பிறேசர்என்ற பேரைக்கேட்டதும் அவருக்குப் பீற்றர்சொன்னது ஞாபகத்துக்குவந்தது. சற்றுநேரம் அவருடன்பேசியபின் அவர் தமது மனைவியையும், மகனையும்அழைத்தார். பெரியவர் பீற்றரை அன்புடன்அரவணைத்து, "தம்பி! பலஆண்டுகளுக்கு முன் கடவுளுக்கு நான் ஒருவாக்களித்தேன். உன்வழியாக அந்தவாக்கை நிறைவேற்றப்போகிறேன். ஓர்முக்கியமானகாரியம் அனுகூலமானால் என்மகனைக் குருத்துவஅந்தஸ்துக்குக் கையளிப்பதாக நான்வாக்களித்தேன். கடவுள் தமக்குப்பிரியமானவர்களையே குருமாராகத் தேர்ந்தெடுக்கிறார் என்பது அப்பொழுது எனக்குத்தெரியாது. என்மகனுக்குத் தேவ அழைத்தல் இல்லை. என்மோட்டர் தொழிற்சாலையை அவன் நடத்திவருகிறான். அவனுக்குப்பதிலாக நீ குருவாகிறது சர்வேசுரனின்சித்தம் என நினைக்கிறேன். அன்றிரவு நான் உன்னைப் பார்த்ததும் இது என்மனதிற்பட்டது. என்வாக்குறுதியை நான் காப்பாற்ற முடியாமற் போனதுபற்றி நெடுங்காலமாகக் கவலைப்பட்டுக்கொண்டிருந்தேன். உனக்குக் குருவாகவர ஆசை. அது நிறைவேறாமற்போனதினால் நீ வருந்தினதாகத் தெரிவித்தாய். குருத்துவகல்வி கற்பதற்கான செலவையெல்லாம் நானேஉனக்குக் கொடுக்கப் போகிறேன். உன்பெற்றோர் ஒன்றும் செலவழிக்கவேண்டியதில்லை. கிறிஸ்மஸ்வெகுமதியாக நீ இதை ஏற்றுக் கொள்ளவேண்டும்" என்றார்.

பீற்றர் தன் தந்தையையும், தாயையும்நோக்கினான். "மகனே! கடவுள் கேட்கையில் இல்லைஎன்று சொல்லலாமா? அவர் உன்னைக்கேட்டாலும் கொடுக்கவேண்டியதுதானே" என்று அவனுடையதாய் மொழிந்தாள். கடைசியாகப் பீற்றரின் விருப்பம் நிறைவேறியது. குருவானார்.

சில ஆண்டுகளுக்குப்பின் பிறேசர் சாகுந்தறுவாயில் இருந்தார். அவர் மகன் அருகில்நின்றார். இருவரும் யாரோஒருவரைக் காத்திருப்பவர் போல் தோன்றினர். கடைசியாக நேர்ஸ் கதவைத்திறந்தாள். ஒருகுருவானவர் உள்ளேநுழைந்தார். பிறேசரின்மகன் "கடவுள் துதிக்கப்படுவாராக! சுவாமி நீங்கள்வந்துவிட்டீர்களா? உங்களைத்தான் காத்திருந்தோம். அப்பாநெடுநேரம் உயிருடன் இருக்கமாட்டார்கள்" என்றார். குருவானவர் பிறேசர்அருகிற்சென்றார். சென்றதும் அவர்கண்கள் அகலத்திறந்தன. ஆனந்தம் முகத்தில் தாண்டவமாடியது. "சுவாமி! உங்களைத்தானே ஆவலோடுகாத்திருந்தேன். நீங்கள்வருவீர்களென நிச்சயமாகத் தெரியும். எனக்கு இந்தப்பாக்கியத்தைக் கொடுத்ததற்காக நான் கடவுளுக்கு நன்றிசெலுத்துகிறேன். சீக்கிரம்நான் அவரிடம்போவேன். எனக்காக வேண்டிக்கொள்ளுங்கள்" என்றார்.

சிலமணிநேரத்துக்குப்பின் மரிக்கிறவர்களுக்காகச் சொல்லப்படும் அழகியசெபங்களைப் பீற்றர்சுவாமியார் செபித்துக்கொண்டிருக்கையில் பிறேசரின் ஆத்துமம் நித்தியத்துள் நுழைந்தது. கடவுளுக்கு ஒருபரிசுத்த குருவானவரைத் தருவதாகக் கொடுத்த வாக்கைநிறைவேற்றிய அவர் மகிழ்வுடன் தமதுநடுவரிடம் சென்றார்.

## தலைமை ஆசிரியர் தேவை

நுவரெலியா அர்ச். சவேரியார் தமிழ்ப்பாடசாலைக்குப் பயிற்றப்பட்ட 1-ம் வகுப்புத் தாரதரப்பத்திரம்பெற்ற தலைமைஆசிரியர் 1953-ம் ஆண்டு தை யாதந்தொடக்கந் தேவை. இவர் ஆங்கிலஅறிவு உள்ளவராய் இருத்தல் விரும்பத்தக்கது. இது ஐந்துக்கு மேற்பட்ட ஆசிரியரைக்கொண்ட 'பெரிய'பாடசாலை. விண்ணப்பங்கள் கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்பப்படவேண்டும்.

T. A. J. Mathuranayagam,
Gen. Manager, R. C. Schools.
Jaffna 16-12-52.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

## அண்ணா சொல்வது

அருமைச் சகோதரங்களே !

மனஉறுதி உள்ளவர்கள்தான் அர்ச்சியசிட்டர்கள் ஆவார்கள். சிறுவர்களாகிய நீங்கள் மனஉறுதியை அடைவது எப்படி?

நன்மையானது எது? சருவேசுரன் மட்டில் உங்கள் கடமை எது? அவர் உங்களிடம் கேட்பது எது? என்று முதல் அறிந்து கொள்ளுங்கள்.

அதன்பின் அதை எப்படி நிறைவேற்றலாம், எந்தத் தருணங்களில் நிறைவேற்ற வேண்டும் என்று குறித்து அந்த நன்மையை நிறைவேற்றத் தெண்டியுங்கள்.

அப்படிச் செய்யும் பொழுது இடையிடையே நீங்கள் தவறுவீர்கள். தவறினாலும் செய்யவேண்டிய கடமையைச் செய்யுங்கள். கடமையை நிறைவேற்றும் பொழுது கடுகளவும் பிசகாமல் அதிற் கடைப்பிடியுங்கள். "மெல்லமெல்லப் பாயுந் தண்ணீர் கருங்கல்லையும் உருக்கிப் பாயும்; அடிக்க அடிக்க அம்மியும் நெகிழும்" என்பன உங்கள் ஞாபகத்தில் இருக்க வேண்டியவை. இப்படிச் செய்தால் நீங்கள் மனஉறுதி அடைவீர்கள். இலகுவாய் அர்ச்சியசிட்டர்கள் ஆவீர்கள். சுபம்

உங்கள் அன்புள்ள
அண்ணா

## அர்ச். பிரான்சீஸ் சவேரியார்

### 15. நரமாமிசபட்சணிகளிடையில் (1546)

அர்ச். சவேரியார் "சீரும்" என்னுமிடத்திலிருந்து "நுசலாற்" தீவுக்குப் பிரயாணமானார். இத்தீவில்வசித்த அல்லூரேஸ்எனும் ஓர் வித அஞ்ஞான சாதியினர் யுத்தத்திலே இறப்போரின் பிரேதங்களைச் சாப்பிட்டு வந்தனர். அர்ச். சவேரியார் இந்த அஞ்ஞானிகளுடன் சொற்பகாலம்சீவித்து அவர்களைமனந்திருப்பிச் சத்தியமறையிற்சேர்க்கத் தம்மாலான மட்டும் முயன்றார். ஆனால், அவரின் முயற்சி பலனளிக்காமல் போய்விட்டது. மிகவும் விசனத்துடன் வொஸ்ரோ ரெட்றிக்குவஸையும் கூட்டிக்கொண்டு அத்தீவிலிருந்து மறுபடியும் அம்போயினாவுக்குத் திரும்பலானார்.

நுசலாற்தீவில் இருந்தவர்களில் ஒரேயொருவாலிபனையே அவர் மனந்திருப்பினார். அவனுக்கு ஞானஸ்நானம்கொடுத்துப் பிரான்சீஸ்என்னும் பெயரிட்டார். இன்னும் அவனுக்கு உறுதிமொழியாகச் சொன்னதாவது: பிரான்சீஸ்! தேவனின் இரக்கத்தில் நம்பிக்கையாயிரு; உனது பரிசுத்தசமயத்தில் பிரமாணிக்கமாயிரு; உனது ஆவி உன் உடலைவிட்டுப் பிரியும் வேளையில் நீ சுத்தஅந்தஸ்திலேயே இருப்பாய்; உனது உதடுகளால் யேசுவின் திருநாமத்தை உச்சரித்துக்கொண்டே நீ மரிப்பாய்" என்றார்.

அர்ச். சவேரியார் அவ்விடத்தைவிட்டுப் போனபின். பிரான்சீஸ் ஓர்போர்வீரனானான். அப்போது மகமதியருக்கும், அவ்வூரவர்களுக்கும் இடையில் நடந்த யுத்தத்தில் அவன் மிக ஓர்மத்துடன் சமர்செய்தான். "இகமாகு" என்னும் கோட்டையைக் கைப்பற்ற நடந்தகடும் போரில் அவன் படுகாயமுற்றான். வொஸ்ரோ ரெட்றிக்குவஸ் தனது நண்பனுக்கு உதவிபுரிய அவன் பக்கம் போய்ச்சேரும்போது, பிரான்சீஸ் "யேசுவே! யேசுவே! யேசுவே!" என்று திரும்பத் திரும்ப உச்சரித்துக்கொண்டே கிடக்கிறதைக் கண்டான். அவன் தனது சிநேகிதனுக்குத் தன்னால்கூடிய சிகிச்சையெல்லாம் செய்தான். ஆயினும், பிரான்சீஸ் குணமடையாது பாக்கியமாக மரித்தான். இவ்வாறாக அர்ச். சவேரியார் முன்கூறிய தீர்க்கதரிசனம் நிறைவேறலாயிற்று.

அர்ச். சவேரியாரின் மரணத்துக்கு ஐம்பது வருஷங்களுக்குப் பிறகு புரொட்டஸ்தாந்த சமயத்தினரான டச்சுக்காரர்அம்போயினா தீவைக் கைப்பற்றினர். அவ்விடமுள்ள கத்தோலிக்கரைத் துன்புறுத்தினர். தங்கள் தப்பான போதனையை ஏற்றுக் கொள்ளும்படி பலவந்தப் படுத்தினர். ஆனால், அவர்கள் நினைத்தபடி காரியம் நடைபெறவில்லை. வேதவைராக்கியமாய் நின்றவர்களில் ஒருவரான "வொஸ்ரோ ரெட்றிக்குவஸ்" அத்தீவிலிருந்து துரத்தப் பட்டார். அவர் தேவசித்தத்தால் பிலிப்பைன் தீவுபோய்ச் சேர்ந்து சிலகாலம் அவ்விடத்தில் சீவித்துப் பாக்கியமான மரணம் அடைந்தார்.

## ஒழுக்கம்

"ஒழுக்கமே அறிவு"

"ஒழுக்கம் உயிரினும் மேலானது"

"ஒழுக்கம் உயர்வு தரும்"

"உலகம் வேண்டுவது ஒழுக்கமே"

"ஒழுக்கமே எல்லாவிடத்தும் பயனளிக்கும்"

"ஒழுக்கமொன்றே உயர்குலமாக்கும்"

"பெருமையற்ற இடமே ஒழுக்கத்தின் இருப்பிடம்"

"சமயப் பற்றற்ற ஒழுக்கம் வேரில்லாமரம்"

"ஒழுக்கம் என்பது போர்க்களம் போன்றது. அதில் வாழவேண்டுமெனில் ஓயாது மனதோடு போராடவேண்டும்"

"குளிர் மிகுதிதான், கந்தை உடைதான். ஆனால், என் ஒழுக்கம் எனக்கு உஷ்ணந்தரும"

"ஜெயம்"

## குழந்தாய்!

1. அன்பு வேண்டும் குழந்தாய்!—உன்
அகத்தில் அருவி போலே
துன்பம் அகற்ற வேண்டும்—பனி
தூரத்தும் பரிதி போலே

2. அறிவு வேண்டும் குழந்தாய்!—பிழை
அறிந்து நீக்கும் அறிவு
பொறுதி வேண்டும் குழந்தாய்!—இப்
பூமித் தாயைப் போலே

3. உண்மை உரைக்க வேண்டும்—நிதம்
ஒளிருந் தங்கம் போலே
திண்மை வேண்டும் குழந்தாய்!—அலை
திருப்பும் பாறை போலே

4. நன்மை செய்வாய் குழந்தாய்!—பொன்
நாடு செழிக்க வேண்டும்
புன்மை நீக்க வேண்டும்—களை
போக்கும் உழவன் போலே

5. தமிழைப் போற்ற வேண்டும்—பெற்ற
தாயைப் போற்றல் போலே
சுமமும் வேறு பாஷை—நீ
கற்றுத் தேறல் வேண்டும்

6. உயர்ச்சி வேண்டும் குழந்தாய்!—வான்
ஓங்கும் இமயம் போலே
முயற்சி வேண்டும் குழந்தாய்!—ஆன்ம
முயற்சி அதிகம் வேண்டும்.

"ஜெயம்"

## யேசு நல்ல அண்ணர்

யேசு நல்ல அண்ணர்
இன்ப தெய்வ மன்னர்
ஆசை யோடு நாளும்
அண்ட லாமே நாமும்

தம்பி தங்கை நாமே
சார்ந்து செல்ல லாமே
வெம்ப விட மாட்டார்
வெறுத்துக் கோபம் காட்டார்

அன்பு ஒன்றே கேட்பார்
அணைத்துப் பாது காப்பார்
இன்ப வானில் சேர்ப்பார்
எம்மை வாழப் பார்ப்பார்

அண்ணா யேசு நமக்கு
அம்மா மாதா நமக்கு
என்ன பயம் எமக்கு
என்றும் உலகில் இருக்கு

எம். எவ். சேவியர்.

## எமது நாக்கு

பல்லாண்டுகளாகப் பெரும் அறிவாளிகளும், புலவர்களும் எமது உடம்பின் உறுப்புகளில் ஒன்றாகிய நாவைப் பற்றி வியந்தும், இகழ்ந்தும் கூறியுள்ளார்கள், கண்டிதம் செய்யப்படாத நாவு நிறைவேற்றக் கூடிய கெடுதிகள் அனந்தம்.

நாகரீக உலகிலுள்ள தேசங்களில் பாம்பரையாக வழங்கி வரும் முதுமொழிகளை ஆதாரமாகக் கொண்டு எமது நாவின் கெடுதலைச் சற்று உணர்ந்து கொள்வோமாக.

"எலும்பில்லா நாக்கு எவ்வளவு சிறிதாயும், பலவீனம் உள்ளதாயும் இருப்பினும், அதற்கு மாய்க்கவும், நசுக்கவும் வல்லமை உண்டு" எனக் கூறுகிறார் (கிரேக்கர்)

"நாக்கு, பெரிய சேனைகளினும் பார்க்கக் கூடிய அதம் செய்யும்" எனக்கூறுகிறார் (துருக்கியர்)

"நீண்டநாவே! உலகின் அழிவே!" எனக் கூறுகிறார் (பார்சியர்)

"உனது நாவு உன் சிரசைச் சேதியாதிருக்கட்டும்" எனக் கூறுகிறார் (எகிப்தியர்)

"நாவால் பிறக்கும் சொல்லின் வேகம், பந்தயக் குதிரையைத் தானும் முறியடிக்கும்" எனக் கூறுகிறார் (சீனர்)

"உன் இருதயமே உனது நாவின் களஞ்சியம்" எனக் கூறுகிறார் (அராபியர்)

"உன் கால்களைத் தவற விடினும், உன் நாவைத் தவறவிடாதே" எனக் கூறுகிறார் (எபிரேயர்)

"தனது நாவைப் பேணி வைப்பவன், தனது ஆன்மாவையே பேணுகிறான்" எனக்கூறுகிறார் (அமெரிக்கர்)

மேலே காட்டியுள்ள முதுமொழிகளுக்கு ஏற்ப எமது தமிழ்ப் புலவர் திருவள்ளுவர் தமது திருக்குறளில்,

"யாகாவார் ஆயினும் நாகாக்க—
காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" எனக் கூறியுள்ளார்.

ஆனதால் நமது நாவின் கொடுமையை நன்கு உணர்ந்து அதன் போக்குக்கு விட்டுக் கொடுக்காது, நன்மையைப் பயக்கும் வழியில் அதை உபயோகித்து நமக்கும், பிறர்க்கும் பயன் உண்டாகச் செய்வோமாக!

## உங்களுக்குத் தெரியுமா ?

1. புதிய கருதினால்மாரின் நியமனத்தோடு தற்போது திருச்சபையில் எத்தனைதேசங்களைச்சேர்ந்த கருதினால்மார் இருக்கின்றார்கள்?

26 தேசங்களைச்சேர்ந்த கருதினால்மார் இருக்கின்றார்கள், இவர்களில் இத்தாலியகருதினால்மார் 27 பேரே.

2. அர்ச். சிலுவை அருளப்பரால் அடியிடப்பெற்ற கீர்த்திவாய்ந்த சந்நியாச சபைஎது?

திருப்பாடுகளின் சந்நியாச சபையே.

3. மரியாயின் நீலப்படையின் நோக்கம் யாது?

உலகில் சமாதானம் நிலவவும், ருஷியா மனந்திரும்பவுமாகச் செபம் தபம் என்னும் ஆயுதங்களால் நாஸ்திக பொதுவுடைமை வாதிகளின் செம்படையுடன் போர்புரிவதுதான்.

4. உலகிலேயே மிகப்பெரிய ஐந்து நகரங்கள் எவை?

விஸ்தீரணத்தைப் பொறுத்த மட்டிலே லண்டன் (693 சதுர மைல்) லொஞ் ஆஞ்சேல்ஸ் (640 சதுரமைல்) பேர்ளின் (340 சதுர மைல்) நியூயோக் (299 சதுரமைல்) ரோக்கியோ (213 சதுரமைல்) எனும் ஐந்து நகரங்களுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுபவ கைமருந்துகள்

**17.** வெட்டுக் காயங்களுக்கு மருந்துகள் எவை?
(1) சுக்கு, வெற்றிலை, சுண்ணும்பு மூன்றையும்கடித்து வைத்துக் கட்டலாம்.
(2) ஒட்டறையும், சுண்ணும்பும் குழைத்துக்கட்டலாம்.
(3) ஈரத்துணிசுற்றி அடிக்கடி நனைத்துக்கொள்ளலாம்.
(4) தென்னையின் அடிமட்டையிலுள்ள "பூசு"வைத்துக் கட்டலாம்.

**18.** முள்ளுத்தைத்தால் என்ன செய்யலாம்?
(1) பழப்புளி வைத்துக்கட்டலாம்.
(2) ஊறுகாய் வைத்துக்கட்டலாம்.
(3) முள்நாசனிலையைத் துவைத்துக்கட்டலாம்.

**19.** ஒருஆளுக்கு ஆணிதைத்தால் என்னகைமருந்து செய்யலாம்?
(1) எலுமிச்சம்பழத்தைத் துண்டுகளாகவெட்டித் தேங்காயெண்ணெயிற்பொரித்துக் கட்டலாம்.
(2) பழப்புளியைச் சாணியிற் பொதிந்து சுட்டுவைத்துக்கட்டலாம்.
(3) புலிநெய்வைத்து நெருப்பாற் காய்ச்சலாம்.

**20.** இரவில்நித்திரையிலே காணுக் கடிவிஷத்துக்கு என்னசெய்யலாம்?
(1) பிரண்டை, பழப்புளி, உப்பு மூன்றையும் அரைத்துப் பூசலாம்.

**21.** புலிமுகச் சிலந்திக்கடிக்கு மருந்தென்ன?
(1) கறிமுருங்கையிலை, மிளகு, உப்புமூன்றையும் அரைத்துக் கடிவாயில்வைத்துக் கட்டலாம்.

**22.** எலிக்கடிக்கு என்னமருந்து?
(1) பொன்னை நெருப்பிற்காய்ச்சிக் காயத்திலே கட்டலாம்.
(2) ஒருபேதி குடிக்கலாம்.
(3) அவுரி, கீழ்க்காய்நெல்லி, முடிதும்பை, குப்பைமேனி இவைகளை அரைத்துச் சிறுநீரிற் கொதிக்கவைத்து எடுத்துப் பூசலாம்.

**23.** வாயவியலை எப்படி மாற்றலாம்?
(1) சுருநெய்தின்றுவர மாறிவிடும்.
(2) அகத்திப்பூவைக் கறியாக்கி உண்ணலாம்.
(3) கோழிமுட்டையை மாலைநேரம் அவித்து ஓட்டைநொறுக்கி உப்பிலே புதைத்துவைத்துக் காலையில் தலைமுழுகிவந்த உடனே எடுத்து வெறுவயிற்றில் உண்ண வேண்டும்.

**24.** பல்வலிக்கு என்ன செய்யலாம்?
(1) சீனக்காரத்தை வெந்நீரிற் கலந்து வாய்கொப்பளிக்கலாம்.
(2) கிராம்பெண்ணெய் பூசித்தேய்க்கலாம்.
(3) கண்டங்கத்தரிச் சமூலத்தைச் சுட்டுக்கரியாக்கிப் பல்விளக்கலாம்.

**25.** சிலபேருக்கு முகத்தில் படரும் ஒருமாதிரிக்கறுப்புக்கு என்ன செய்யலாம்?
(1) நந்தைச்சூரிவேரைப் பசுப்பாலில்அரைத்துப் பசுப்பாலில் குடித்துவர மாறிவிடும்.

**26.** அறணைகடித்தால் அதுக்கு மருந்தென்ன?
(1) சாரணைச்சமூலத்தைச் சிறுநீர்விட்டு அரைத்து உள்ளுக்குக் கொடுத்து, வெளிக்கும் பூசச் சுகமாகும்.

**27.** காதடைப்புக்கு என்னசெய்யலாம்?
(1) வேப்பெண்ணெயை வெற்றிலையில்விட்டுச் சூடாக்கிக் காதில் விடலாம்.
(2) பனங்கற்றாளையைச் சூடுகாட்டிப்பிழிந்து காதில்விடலாம்.

**28.** காதுக்குள்ளே இலையான், எறும்பு ஏதாவது போய்விட்டால் அதற்கு என்னசெய்யலாம்?
(1) கோழியவரை, குப்பைமேனி இரண்டினதும் இலைகளைக் கசக்கிப்பிழிந்து காதில்விடலாம்.

**29.** பெரிய கோழைப்போக்கான இருமலுக்கு என்னசெய்யலாம்?
(1) கருப்பஞ்சாறு, சர்க்கரை, கறியுப்பு, தேங்காய்ப்பால், அல்லது பசுப்பால் இதெல்லாஞ்சேர்த்துப் புழுங்கலரிசியில் கஞ்சி காய்ச்சிக் குடித்துவரக் கட்டாயம் சுகமாகும். இதற்குத் "கோழைக்கஞ்சி" என்று பெயர்.

## நாடு சங்கதிகள்

— பிரித்தானியஅரசு நிகழும்வருடத்தில் தனது தேசபாதுகாப்புக்கெனச் செலவிடவிருக்கும் பணம் 146 கோடியே 20 லட்சம் பவுண். இதிலே ஆயுதங்களின் உற்பத்திக்கென்று விடப்பட்டுள்ள பணம் 60 கோடி பவுணுதும். முந்திய தொழிற்கட்சிஅரசாங்கம் செய்துள்ள மூன்றுவருட ஆயுதசுவீகாரணதிட்டத்தைக் கொண்டுநடத்துகிறதானுல் பிரித்தானியஅரசு தனது தேசபாதுகாப்புக்கென இவ்வருடம் 165 கோடி பவுணுக்குமேல் செலவிட வேண்டியதாயிருக்கும்.

— கம்யூனிஸ்தஆட்சி நடைபெறும் செக்கோசிலவாகியாவிலே உபபிரதமரான சிடெனெக் பியெர்லிங்கர் என்பவரும், மாஜிமந்திரிமார் ஐவரும், மற்றும்அநேகபேர்களும் கைதுசெய்யப்பட்டிருப்பதாகச் செய்திகிடைத்திருக்கிறது. இவர்கள் சமீபத்திலே முன்னுள் கம்யூனிஸ்தஅதிகாரிகள் பதின்மருடன் கழுவேற்றப்பட்ட அந்நாட்டுக் கம்யூனிஸ்தகட்சியின் முந்திய பிரதம காரியதரிசியான திரு. று டொல்வ் சிலான்ஸ்கிஎன்பவரின் நண்பர்களாம்.

— மலாய்நாட்டிலே அடுத்தவருட ஆரம்பமுதல் அரிசிக்குப்பதில் கோதுமையைஉபயோகிப்பதைப் பிரசாரஞ்செய்யும் இயக்கம்ஒன்று ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இந்தஇயக்கத்துக்குச் சுவர்விளம்பரங்கள், சினிமாவிளம்பரங்கள்ஆதியன உபயோகிக்கப்பட விருக்கின்றன. இந்தஇயக்கத்தால் தாய்லாந்திலிருந்து அங்கு இறக்குமதியாகும்அரிசியின்தொகை குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

— பீக்கிங், பேர்லின்முதலாம் நகர்களிற்போன்று ஆஸ்திரியாவின் தலைப்பட்டணமாகிய வீயன்னு நகரிலும் சோவியற்அரசின் ஆதிக்கத்தில் "சமாதானமகாநாடு" என்று மற்றோர்போலி மகாநாடு கூடுகின்றது. அதற்குச்சமுகங்கொடுக்கும் தனது அங்கத்தவர் எவரையும் தள்ளிப்போடுவதென்று பிரித்தானியதொழிற்கட்சி நிர்வாக சபை தீர்மானித்திருக்கிறது.

— பாப்பரசர் நவமாக ஆக்கிய 24 கருதினல்மார்களிலும் வயதில்அதிகம்குறைந்தவர் இத்தாலியிலே ஜெனேவாநகர் அதிமேற்றிராணியாரான சிறிஆண்டவரே. இவருக்கு வயது 46. அடுத்தபடியாக அதிகம் குறைந்த வயசுடையவர் கனடாதேச மொண்றியல்நகா அதிமேற்றிராணியாரான லெஜெர்ஆண்டவரே. இவருக்கு வயது 48.

— சென்னைஅரசாங்க சட்டசபையிலே கம்யூனிஸ்தரின் ஆதிக்கத்தைக் கொண்ட ஐக்கியசனநாயகமுன்னணி சின்னபின்னமாகத் தொடங்கியிருக்கிறது. பிரஜாகட்சி, தமிழ்நாட்டு உழைப்பாளர்கட்சிஆதியன அந்தமுன்னணியைக்கைவிட்டு மாக்ஸியமில்லாத எதிர்க்கட்சிஒன்றை ஆக்கியிருக்கின்றன.





செகமீட்பராகிய திவ்விய பாலனின்

**நவதின உற்சவம்**

ஆசா. கபிரியேல் பச்சேக்கு சுவாமிகளால் இயற்றப்பட்டது.

நல்லூர், ஞானப்பிரகாச சுவாமிகளால் 1906-ம் ஆண்டு புதுக்கி அச்சிடப்பெற்றது.

நாற்பத்தநான்கு வருடங்களின்பின் இப்போது 2-ம்பதிப்பாக வெளிவந்திருக்கிறது.

நத்தால் திருநாளைப் பூச்சிய பயபக்தியுடன் கொண்டாட உதவியான
நோவனைத் தியானங்களும், செபங்களும்
திவ்வியபாலனின் பிறப்பைச்சார்ந்த ஆசைகள்,
புகழ்ச்சிகள், பிரார்த்தனைகளும் அடங்கியது.

—விலை 75 சதம்—

யாழ்ப்பாணம்

அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை


## பாடசாலைப் பரிசளிப்புவிழா

குடாப்பாடு, அர்ச். மரியநாயகியின் தமிழ்க்கலவன் பாடசாலைப் பரிசளிப்பு விழா நிகழும் மார்கழி 12-ந்திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் வண. மைக்கல் கொறயா சுவாமியவர்களின் தலைமையிலே அதிவிமரிசையாக நடைபெறலாயிற்று.

முந்தப்பாலியர் தங்கள் இன்னிசைப் பாவால் பாமன்பதம் பணிந்துநிற்க, அதைத்தொடர்ந்து வந்தனப்பாக்கள் அவையினரை மகிழ்வுடன் வரவேற்றன. பெற்றோரும் மற்றோருமாகப் பன்னூற்றுவர் தேங்கியிருந்தனர். வண. உதவிக்கட்டளைக் குரவராலும், தலைமையாசிரியராலும் சொற்பொழிவுகள் ஆற்றப்பட்டன. பாஷை, எண், வாசினை, இலக்கியம், சமயம் முதலான பிரதானபாடங்களில் விசேடதிறமை காட்டிய மாணவர் மாணவிகளுக்கும், பாடசாலைவரவு, நல்லொழுக்கம் என்பவற்றில் முதலிடம்வகித்த மாணவர் மாணவிகளுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

பின்னர் பாடசாலைப் பாலியரால் படிக்கப்பட்ட இன்னிசைக் கீதங்களையும், நடிக்கப்பட்ட அரியநடினங்களையும் அவையினர்கண்டு அகங்களித்தனர். மாணவிகளால் சித்தஞ்செய்யப்பட்ட சித்திரத் தையல்களும், கண்களைக்கவரும் கைப்பணிப் பொருட்களும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தமையும் ஈண்டு குறிப்பிடற்பாலதாகும். கடைசியாக இப்பாடசாலையில் நாலாண்டுகளாய் ஆங்கிலக்கலைகற்பித்து மாற்றம்பெற்று மட்டக்களப்புக்குச் செல்லும் அருங்குண ஆசிரியை செல்வி லிலி செபமாலை அவர்களின் பிரிவுபசாரத்துடனும் பரிசளிப்புவிழா இனிது சமாப்தியாயிற்று.

மேரி எவுஜின் பேர்னுண்டே.
(S. S. C. மாணவி)

பண்டத்தரிப்புக் கிராமச்சங்கம்

## கிராம வேலை விளம்பரம்

சில்லாலை — உந்துவத்தை ஒழுங்கை செப்பனிடல்

மேற்படிவேலையைக் குத்தகையாக எடுத்துச்செய்யவிரும்புவோர் 1952-ம் ஆண்டு மார்கழிமாசம் 27-ந் திகதி பகல் 12 மணிக்குமுன் கிராமச்சங்கத் தலைவருக்கு மனுப்பணணல் வேண்டும்.

மனுப்பண்ணவிரும்புவோர் 1952-ம் ஆண்டு மார்கழிமாசம் 27-ந் திகதிக்குமுன் மேற்படி சங்கக்கந்தோரில் ஒவ்வொரு விகித இடாப்புப் பத்திரத்திற்கும் ரூபா 50 கட்டிப் பெற்றுகொள்ள வேண்டும்.

மேற்படிவேலையைப்பற்றிய விபரங்களைக் கிராமச்சங்கக்கந்தோரில் அறிந்துகொள்ளலாம்.

சு. நாகமுத்து
16-12-52 கிராமச்சங்கத் தலைவர்

அர்ச். பிரான்சீஸ்துவின்

## மூன்றாஞ் சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ் சபை வருடாந்த ஞானஒடுக்கம் இம்மாதம் 30-ம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 6-15 மணிக்குத் திவ்வியபூசையோடு ஆசனக்கோவிலில் ஆரம்பமாகி, மாலை 5 மணிக்குத் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதத்தோடு முடிவாகும். இருவரை நவசந்நியாசத்திக்குச்சேர்க்கும் சடங்கும், வார்த்தைப்பாடு புதுப்பித்தலும், மாதாந்தகூட்டத்தோடு பின்னேரம் 4 மணிக்கு நடந்தேறும். 1953-ம் வருஷம் தைமாசம் பரிபூரணபலன்கள் அடையக்கூடியநாட்கள் :— 1, 2, 4, 6, 16, 19, 23, 28 30, 31. 1-ம் தேதியிலும், 6-ம் தேதியிலும் பொதுப் பாவமன்னிப்பு அடையலாம்.

A. S. FRANCIS OF MARY
for Director

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண நகரசபை

"ஆட்டுமாமிசம் விற்பதற்கான கேள்விப்பத்திரம்" என்றுகுறித்து முத்திரை பதித்தஉறைகளில் அனுப்பப்படும் குத்தகைக்கேள்விப்பத்திரங்கள் இம்மாதம் 22-ந்திகதி திங்கட்கிழமை மத்தியானம் 12 மணிவரையில் ஏற்றுக்கொள்ளப்படும். அங்கீகரிக்கப்படும் கேள்விக்காரர் பெரியகடை மீன்சந்தைக்குச் சமீபமாகவுள்ள 2-ம் இலக்க மாமிசக்கடை கொடுக்கப்படுவர். கேள்விக்காரர்கள் மாதிரிக் கேள்விப்பத்திரத்திலே பின்வரும்தகவல் கொடுக்கவேண்டும்.

(1) எலும்புகளுடன்சேர்த்துத் தாங்கள் விற்கத் தயாராயிருக்கும் ஆட்டுமாமிசத்தின்விலை ஒருறாத்தல்.

(2) எலும்பில்லாமல் தாங்கள்விற்கத் தயாராயிருக்கும் ஆட்டுமாமிசத்தின்விலை ஒருறாத்தல்.

(3) தாங்கள்விற்கத் தயாராயிருக்கும் ஈரலின்விலை ஒருறாத்தல்.

அங்கீகரிக்கப்படும் கேள்விக்காரர் பின்னுற்சொல்லப்படும் நிபந்தனைகளைக் கண்டிப்பாக நிறைவேற்றுமாறு கேட்கப்படுவார்கள். அவற்றில் எதையேனும் மீறுவதானது நீதிஸ்தல அன்றேல் இலாகாநடவடிக்கைக்கு அவரை உள்ளாக்கிவிடும்.

### குத்தகைக் கேள்வி நிபந்தனைகள்

(a) அங்கீகரிக்கப்படும் கேள்விக்காரர் தானென்று அறிவிக்கப்பட்டதும் பணமாக 200 ரூபா பிணைகட்டவேண்டும்.

(b) அவர் பெரியகடை மீன்சந்தைக்குச்சமீபமான 2-ம் இலக்கக் கடை வழங்கப்படுவார். மாமிசக் கடைகளைக் கட்டுப்படுத்துவதற்கென்று சபையால்ஆக்கப்பட்ட ஒழுங்குகளிலுள்ள நிபந்தனைப்படி இந்தக்கடையை அவர் நடத்திவரவேண்டும். காலந்தோறும் சபையால்விதிக்கப்படும் கடைக்குத்தகையைக் கட்டிவரவேண்டும்.

(c) மாமிசம்அடித்து விற்பவருக்குரிய லைசென்சை அவர் பெற்றிருக்கவேண்டும்.

(d) மாமிசத்துக்காகக் கொல்லப்படும் சகலமிருகங்களும் சுகாதார இலாகாவால் அனுமதிக்கப்படவேண்டும். வெள்ளிக்கிழமைகளிலே மிருகங்களை அடிக்க அனுமதிக்கப்படமாட்டாது.

(e) அங்கீகரிக்கப்பட்ட மூடுபெட்டிகளில் அல்லதுவண்டிகளில் மாமிசக்கடைக்கு மாமிசம் ஏற்றிச் செல்லப்படவேண்டும்.

(f) மாமிசக்கடையில் விற்கப்படும் மாமிசமஆதியவற்றை நிறுப்பதற்கென்று அனுமதிக்கப்பெற்ற தராசுகள் படிகள் மாத்திரம் பாவிக்கப்படவேண்டும்.

(g) மாமிசக்கடையில் வேலைசெய்கிற வேலைகாரர்களெல்லாம் அந்தக் கடையிலே மாமிசம்வாங்க வருகிறவர்களுடன் உபசாரமாக நடந்துகொள்ளவேண்டும்.

(h) மாமிசக்கடை குறைந்தபட்சம் காலை 7 மணிமுதல் பிற்பகல் 1 மணிவரையில் திறந்துவைக்கப்படவேண்டும். பிற்பகல் 5 மணிக்குக் கடை மூடப்படவேண்டும். பொதுசனங்களின் தேவையைப் பூர்த்திசெய்யுமாறு போதிய தொகையானமாமிசம் இருக்கவேண்டும்.

(i) நிபந்தனைகள் கண்டிப்பாக நிறைவேற்றப்படுகின்றனவா என்பதைக் கண்டுகொள்ளுமாறு சுகாதாரவைத்திய அதிகாரியாலும், மற்றும்அதிகாரிகளாலும் கடை பரிசோதிக்கப்படும்.

(j) 24 மணிநேரத்துள் ஒப்பந்தத்தை நிறுத்திவிடுதற்கான அதிகாரத்தைச் சபைகொண்டிருக்கிறது. அங்கீகரிக்கப்பட்ட கேள்விக்காரர் யாதாயினும் நஷ்டம்கோர உரிமையற்றவர்.

(k) மேற்சொல்லிய ஒழுங்குகளில் எதைமீறினாலும் கட்டியபிணைப் பணம் பறிமுதலாவதற்கும், லைசென்சை நீக்குவதற்கும் அவரை உள்ளாக்கிவிடும்.

K. Shanmugam
நகரசபைக் கம்மிஷனர்

நகரசபைக் காரியாலயம்
யாழ்ப்பாணம்,
12 டிசம்பர், 1952.

---

யாழ்ப்பாண நகரசபை

## பிரசித்த ஏலவிற்பனவு

1953-ம் ஆண்டு தைமாதம் 1-ந் திகதி தொடக்கம் 1953-ம் ஆண்டு மார்கழி மாதம் 31-ந் திகதிவரைக்கும் கீழ்க்காட்டப்பட்டிருக்கும் சந்தைகளில் வாடகைப் பணம் அறவிடப்படும் உரித்தைக் குத்தகையாகக்கொடுக்க 1952-ம் ஆண்டு மார்கழிமாதம் 19-ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு இதில் குறிக்கப்பட்டிருக்கும் சந்தைகளில் பிரசித்தஏலத்தில் கூறப்படும்.

சந்தைகளின் விபரம்

1. செங்குந்தர் சந்தை. (இரண்டு அறைகள்உட்படச் சபையின்அனுமதியுடன் அமைக்கப்பட்ட தகரக்கடை புறநீங்கலாக.)
2. முத்திரைச் சந்தை. (தற்காலிகமாகஇருக்கும் தேநீர்க்கடை புறநீங்கலாக.)

ஏலவிற்பனவின்
முறைகளும் நிபந்தனைகளும்

1. செங்குந்தர் சந்தையின் கூடிய கேள்விக்காரன் விற்பனையின்பின் ரூபா 500/ (ஐந்நூறு ரூபா) உடன்கட்டவேண்டும். கேள்வித்தொகையில் மூன்றில் ஒருபங்கு மூன்று நாளைக்குள் கட்டிவிடவேண்டும். மீதித்தொகையை எட்டுச் சமபங்குகளாகப்பிரித்து ஒவ்வோர்மாதமும் 15-ந் திகதியன்று அல்லது அதற்குமுன் கட்டப்படவேண்டும். முதற்கட்டுப்பணம் 1953-ம் ஆண்டு தைமாதம் 15-ந் திகதி அல்லது அதற்குமுன் கட்டப்படவேண்டும். மிகுதிப்பணத்திற்குப் பிணையாகத் தமது சொந்தச்செலவில் தமது உண்மையான காணியை ஈடாகக் கொடுத்து நொத்தாரிஸ்மூலம் பிணை உறுதி முடித்துக்கொள்ள வேண்டும்.

2. முத்திரைச் சந்தையின் கூடிய கேள்விக்காரன் விற்பனையின்பின் ரூபா 150/ (ரூபா நூற்றுஐம்பது) உடன்கட்டவேண்டும். மீதித்தொகையை 26-12-52 க்குள் செலுத்தவேண்டும்.

3. கேள்விக்காரர் கட்டவேண்டிய தொகையைக் கட்டவும், மேற்கூறியபடி நொத்தாரிஸ்மூலம் பிணைஉறுதி முடிக்கவும் தவறுமிடத்து, அவர் கட்டிய பணம் பறிமுதலாக்கப்படும். குத்தகை திரும்ப விற்கப்படும்.

வேறுவிபரங்களை இக்கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்.

கா. சண்முகம்
கொம்மிஷனர்

நகரசபைக் கந்தோர்,
யாழ்ப்பாணம். 10-12-52

---


## அர்ச். மரிய கொறெற்றியின்

### படம்

இரத்தம் வடித்த லீலி எனப்படும் அர்ச். மரியகொறெற்றியின் அழகான படங்கள் விற்பனைக்கு இருக்கின்றன.

பெரியஅளவு: 12″ × 8½″
ஒன்று 75 சதம்

சிறியஅளவு: 4″ × 2½″
விலை: 100-க்கு ரூபா 7-00
தபாற்கூலி 30 சதம்.

கிடைக்கு மிடம்:

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.


## அறிவித்தல்

யாழ்ப்பாணம் கத்தோலிக்க பாடசாலைகளின் பிரதம முகாமைக்காரரின் கந்தோர் நத்தார், புதுவருட விடுமுறையை முன்னிட்டு 23-12-52 தொடக்கம் 5-1-53 மட்டும் மூடப்பட்டிருக்குமென்பதை ஆசிரியர் கவனித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

T. A. J. Mathuranayagam,
*Gen. Manager, R. C. Schools.*
Jaffna 10-12-52

---

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

எனக்குஉண்டாயிருந்த அசாத்திய ரோகமான கன்னப்புற்றுநோய் வச்சிரகாய வரத்தரும், புங்குடுதீவில் கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பவருமான அர்ச். பிரான்சீஸ் சவேரியாரின் மன்றாட்டால் அற்புதவிதமாகக் குணமாயிற்று. எனது நன்றியறிதலைத் தெரிவித்து இதனைப் பிரசுரஞ்செய்கிறேன். அர்ச். சவேரியாரின்நாமம் எங்கும் புகழப்படுவதாக!

குருநகர் அந்தோனி அக்கினேஸ்

---

## சுதேச வர்த்தமானம்

### பளைச் சாராயத்தவறணை

பளையிலே வண்ணான்சேணியிலுள்ள 5-ம்நம்பர் சாராயத்தவறணையை நீக்குவதற்கான சனசம்மதவாக்கு சென்ற 13-ந் திகதி சனிக்கிழமை கேட்கப்பட்டது. 4430 வாக்காளரிலும் 350 பேர் சாராயத்தவறணைநீக்கத்துக்குச் சாதகமாக வாக்களித்தனர். அதனால் அதன் நீக்கத்துக்காக நூற்றுக்கு 81 வீதமானோர் வாக்களித்திருக்கின்றனர். வட இலங்கை மதுவிலக்குச்சபை தான் மேற்கொண்டுள்ள சாராயத்தவறணை நீக்க இயக்கத்தில் அடைந்துகொண்ட முதல்வெற்றி இதுவாகும்.

### அரிசிப்பங்கீட்டுப் புத்தகங்கள்

பதின்மூன்றாவது அரிசிப்பங்கீட்டுப் புத்தகங்கள் (கூப்பன்கள்) அடுத்த வருடஆரம்பத்திலே பாவனைக்கு வரவிருக்கின்றன. 75 லட்சம்புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளன. 1949-ம் ஆண்டு கார்த்திகை 1-ந் திகதிக்குப்பின் முதன்முறையாக இலங்கைக்குவந்த பிறநாட்டினருக்கு இந்தப்புத்தகங்கள் வழங்கப்படமாட்டா. அத்திகதிக்குமுன் வந்த பிறநாட்டினர் புதியபங்கீட்டுப் புத்தகங்கள் வழங்கப்படுமுன் அவ்வாறு வந்ததாக அத்தாட்சிப்படுத்தவேண்டும்.

### பதினெண்ணாயிரம் எக்கர்

இலங்கையிலுள்ள 6,000 அரசினர் பாடசாலைகளிலும் அடுத்தவருடம் பங்குனிமாதத்தோடு 18,000 ஏக்கர் நிலத்தைக் கமச்செய்கையின் கீழ் கொண்டுவருதற்குத் திட்டஞ்செய்யப்பட்டிருக்கிறது. இத்தனை ஏக்கரிலும் உற்பத்தியாகும் உணவுப்பொருட்களிலே நூற்றுக்கு 25 வீதமானவைகள் அந்தந்தப்பாடசாலையிலே மத்தியானப் போசன பாவனைக்குப்போக, வேறு 25 வீதமானவைகள் கமத்தொழிலைநடத்திய ஆசிரியர்களுக்குப் போக, 40 வீதமானவைகள் அரசாங்க விற்பனவுவசதிப் பகுதிமூலம் விற்பனை செய்தற்கு அனுப்பிவைக்கப்படும். வீட்டுப்பறவைகள் வளர்க்கும் கிளப்புகளைப் பாடசாலைகள் தொடக்கத்தக்கதாக வீட்டுப்பறவைகள் கொடுத்துக் கமத்தொழில்மந்திரி காரியாலயம் உதவிசெய்யும்.


Mal. No. 48. Eng.

## இயற்கை ஆற்றல் அல்லது தற் செயல்

நமது மருந்துச்சரித்திரத்தின் பக்கங்களைப்புரட்டிப் பார்க்கும்போது ஓர்மருந்து இன்னநோய்க்கென விதிக்கப்பட்டதாகுமுன் அவற்றுள்அநேகம் குடும்பமருந்துகளாக நெடுங்காலமாய்ப் பொதுப்பாவனையில் ஏலவேதொட்டுத் தானே இருந்துவந்ததைக் கண்டுணர்வது வியப்புக்குரியதாகும். இந்த மருந்துகளில் மகா விசேஷப்பட்ட ஒன்றாகிய குயினைனின் குணமாக்கும் ஆற்றலானது விஞ்ஞானம் அதைக் கண்டுபிடிப்பதற்கு நெடுங்காலத்திற்கு முன்னரே சாதாரணசனங்களால் அறியப்பட்டிருந்தது என்பதைக் கண்டுகொள்வது இன்றும் அதிகவியப்பைத் தருவதாகும்.

இந்தஉண்மை கிருமிகளைப் போக்கும் சகலமருந்துகளுக்கும் உடன்பாடாகும். இவைகள மிகவும்வேறுபட்ட செடிகள் பூண்டுகளிலிருந்து கிடைக்கின்றன, எனினும் ரசாயன விஷயமாய் நெருங்கியசம்பந்த முடையன. குடலுக்குரியகிருமிகள்மட்டிலே யாவும் அதேஆற்றலைக் கொண்டிருக்கின்றன. இருண்டகண்டங்களைச் சேர்ந்த சுதேசிகளால் அவற்றின் இயற்கையான மூலப்பொருட்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டிருக்கின்றன. அதேமாதிரியாய் வெள்ளைக்காரர்அல்லாத மக்கள் தியோபுறோமின், கவேயின் எனும் சத்துக்களை அடங்கிய காட்பி, கொக்கோவா, கோலா, தேயிலை என்பனவற்றையும் கண்டுபிடித்தார்கள். ரசாயனபாகசாலை, ஸ்தாபனம, அல்லதுமகாநாடு ஒன்றும் இல்லாமலே என்னமகத்தானவேலை அவர்கள்செய்திருக்கின்றார்கள்.

அநேகமாய்எல்லாவற்றிலும் அதிகம் விசேஷப்பட்ட சரித்திரம்யாதெனில், குயினைனின் குணப்படுத்தும ஆற்றல் கண்டுபிடிக்கப் பட்டதேயாகும், அக் தாங்களும், ஆபத்துக்களும் நிறைந்த அடர்ந்தபெருங்காட்டைத் தெண்டித்து ரூபிகெரியுங்கள், அதிலே காட்டுமிருகங்கள், விஷப்பாம்புகளிலிருந்து மாத்திரமல்ல, பசைசாதிப்பனவும், வேதனை தருவனவுமான சிறிய மிருகங்களின் தாக்குதல்களிலிருந்தும் பாதுகாக்கப்படவேண்டும். அத்துடன் சோதனை உண்டுபண்ணக்கூடிய நச்சுத்தன்மையான பெரியபழங்களையும், எல்லாநிறத்திலுமேசிறியபழங்களையுமுடையசெடி கொடிபூண்டுகள் இருக்கின்றன. இவைகள் சத்துருசாதிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கின்றன. இந்தச்சாதியினர் மறைவிலிருந்து வெளிகொண்டுவந்து பிடித்துவிடுவார்கள். பொறிக்கிடங்குகள், ஆபத்துகள்நிறைந்த இந்தச்சூழல்கள்மத்தியில் சுதேசிகள் சென்று அத்துணைகசப்பான பட்டையுடன்கூடிய ஓர்மரத்தைக் கண்டுபிடித்தார்கள்.

இதிலிருந்து மனிதவர்க்கத்துக்கு மாபெருஞ்சேவை அளிப்பனவற்றிடையே வைக்கக்கூடிய ஓர்மருந்தைக் கண்டுபிடித்தார்கள். சிங்கோனானப்பெயரிய மரத்தின் பட்டையிலிருந்து குயினைன் பிரித்தெடுக்கப்பட்டது. மலேரியாச் சுரத்தைக் குணமாக்குவதற்குப் பிறசிகிச்சை இன்றியே 5 முதல் 7 தினங்களுக்குத் தினமும் 15 முதல் 20 கிறேய்ன்குயினைன் பாவிப்பதுபோதியதாகும். முக்கியசர்வதேச சங்கத்து மலேரியாநிபுணர்களின் கம்மிஷன் சிபாரிசுசெய்துள்ளபடி, மலேரியாக்காலத்திலே தினமும் 6 கிறேய்ன் குயினைன் பாவித்துவருவதாலே அது வாராமல் தடுத்துக்கொள்ளலாம்.


Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, December 18-1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org